விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalaijaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 04 வியாழக்கிழமை (20.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

## 'வெயிலுக்குள் நில்லாமல் வீடுகளுக்கு செல்லுங்கள்'

### வேலையற்ற பட்டதாரிகளை அனுப்பி வைத்த ஜனாதிபதி

(கொழும்பு)
ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரில், போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டி 23

## கிளிநொச்சி முறிப்புப் பகுதியில் விபத்து இரு இளைஞர்கள் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி முறிப்புப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்தில் உயிரிழந்த துடன் மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.


குறித்த விபத்து நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முறிப்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில்



23

## மயிலிட்டியில் வெடிபொருட்கள் மீட்பு



(அராலி)
மயிலிட்டியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த இடத் தினிருந் து வெடி பொருட்கள் 23

# 19ஐ இரத்துச் செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

## நேற்றைய முதல் கூட்டத்திலேயே முடிவு

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)
அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய் வதற்கும் 20ஆவது திருத்தத்தை உருவாக்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் புதிய அரசாங்கத்தின் கன்னி அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றபோதே இந்த முடிவு எட்டப்பட் டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித் தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பால்ராஜின் சகோதரர் காலமானார்

(முல்லைத்தீவு)
தமிழீழ விடுதலைப் புலி களின் முக்கிய உறுப்பினர் களில் ஒருவரான தளபதி பிரி கேடியர் பால்ராஜின் மூத்த சகோதரர் கந்தையா சந்திரசேகரம் உயிரி 23

## ஜனாதிபதி கோட்டா தலைமையில் 9ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று

(கொழும்பு)
9ஆவது பாராளுமன்றத் தின் கன்னி அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை யில் இன்று ஆரம்ப மாகும். 23

## அனைத்து பாடசாலைகளையும் மீள முழுமையாக ஆரம்பிக்க கல்வி அமைச்சு அனுமதி

(கொழும்பு)
அனைத்து பாடசாலைகளை யும் மீளத் திறப்பதற்கும் அனைத் துத் தரங்களினதும் மாணவர் களுக்கும் வகுப்பு களை நடத்துவதற்கும் 23

## முகவரி கேட்பது போல் பாசாங்கு செய்து சாவகச்சேரி கச்சாய் வீதியில் வயோதிப மாதுவின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)
முகவரி கேட்பது போல் பாசா ங்கு செய்து விட்டு வயோதிப மாது ஒருவரின் தங்கச் சங்கிலி அப கரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் சாவகச் 23

## 20ஆவது திருத்தத்தை உருவாக்க ஐவர் அடங்கிய குழு நியமனம்

(கொழும்பு)
இலங்கை அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் உருவாக்கத் துக்கான சட்டமூல வரைபை தயார்படுத்த ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் அலி சப்ரி, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தொழில் அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா, மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் 23

## முள்ளியவளை முறிப்பில் தமிழரின் காணி அபகரிப்பு

### வனவளத் திணைக்களம் நடவடிக்கை

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு, முள்ளியவளை முறிப்பில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்த 24

## அச்சுவேலியில் கிணற்றுக்குள் தவறி விழுந்த மூதாட்டி பலி

(யாழ்ப்பாணம்)
முகம் கமுவு 23

## அரச வங்கிகளில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து ஆராய

### மகிந்தவால் குழு ஒன்று நியமனம்

(கொழும்பு)
அரச வங்கிகளில் இடம்பெற்ற தாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் பயனற்ற செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு பிரதமரும் நிதியமைச் 24

# பஸ் வண்டியை வழிமறித்து கும்பல் ஒன்று தாக்குதல்

பொன்னாலையில் இருந்து வட்டுக்கோட்டைச் சந்தி வழியாகப் பயணித்த பஸ் வண்டியை வழிமறித்த கும்பல் ஒன்று பஸ் வண்டி மீதும் அதில் பயணித்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது. இச்சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. பொன்னாலையில் நேற்றைய தினம் பஸ் வண்டி ஒன்று வீதியில் நின்ற மாட்டினை மோதிவிட்டு தப்பிச்சென்றது. இதன் காரணமாக குறித்த மாடு இறந்துள்ளது.

சில மணி நேரங்களுக்குப் பின்னர் அவ்வழியால் வந்த பஸ் வண்டியை மறித்து பஸ் வண்டி மீதும் சாரதி மற்றும் பயணிகள் மீதும் மாட்டின் உரிமையாளரின் கும்பலால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக பயணி ஒருவரின் சங்கிலி ஒன்று தொலைந்துள்ளதுடன் பயணிகள் ஐவர் காயமடைந்துள்ளனர். (ம-3.104)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இ.போ.ச. முகாமையாளர் கைதாகி விளக்கமறியலில்

(மன்னார்)

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டஇலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளரை எதிர் வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

மன்னாரில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை போக்குவரத்து சேவையின் வட பிராந்திய முகாமையாளரை நேற்று புதன்கிழமை மாலை மன்னார் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரனைகளை மேற் கொண்ட மன்னார் நீதவான் எம். கணேசராஜா இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மன்றில் முன்வைத்த விண்ணப்பங்களை பரிசீலினை செய்த நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, எதிர் வரும் 27 ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கை அரச போக்கு வரத்து சேவையின் வட பிராந்திய முகாமையாளர் நபர் ஒருவரிடம் முறைப்பாடு ஒன்றை சீர் செய்வதற்கு என 60 ஆயிரம் ரூபாய் பணத்தை மன்னாரில் வைத்து நேற்று புதன்கிழமை காலை இலஞ்சமாக பெற்ற நிலையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3.285)


### விற்பனைக்கு

A9 வீதி, கிளிநொச்சியில்
( அறிவியல் நகர் பல்கலைக்கழக சந்தி)
கடை, வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (3618)

**070 195 6793**


## யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை

# சேவை நலன் பாராட்டு



எமது கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியையாக கடமையாற்றிய

**திருமதி சுலோஜனா சுரேந்திரநாதன்**

**அவர்கள் இன்று (20.08.2020) ஓய்வு பெறுகின்றார். அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**சேவை விபரம்**

02.05.1989 - 07.03.1993 - கிளி/ புனித பற்றிமா R.C வித்தியாலயம்
08.03.1993 - 31.12.1994 - ஆசிரியர் கலாசாலை
01.01.1995 - 31.12.1996 - கிளி/ கனகாம்பிகை கனிஷ்ட வித்தியாலயம்
01.01.1997 - 23.04.2002 - கண்டி இந்து சீனியர் வித்தியாலயம்
24.04.2002 - 07.05.2013 - கண்டி விகாரமாதேவி பெண்கள் கல்லூரி
08.05.2013 - இன்றுவரை - யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை

**எமது கல்லூரியின் வளர்ச்சியில் அர்ப்பணிப்போடு சேவையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியையின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

(C-104)

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை

20.08.2020

## FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA

### NOTICE

**Enrolment and Orientation Programmes**

***for the newly admitted students 2018/2019***

The Enrolment and Orientation Programmes for the newly admitted first-year students to the Faculty of Science, University of Jaffna for **the academic year 2018 / 2019 will be held on Monday 24.08.2020, 8.00 am to 5.00 pm at the Kailasapathy Auditorium** and the Faculty premises. The new students are requested to participate in these Programmes.

**Registrar**

(C-100)

## University of Jaffna

## Walk- in - Interview

**Post of Temporary Assistant Lecturers /Demonstrators /Research Assistant (On Contract)**

**Faculty of Medicine, University of Jaffna**

The above walk-in - interview will be held on **24.08.2020 at 2.00 pm at the Board Room, Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil.**

Those who have passed the Final Examination for the following discipline from the state Universities or UGC recognized Foreign Universities.

- **Clinical / Para Clinical Departments** - **Medical Degrees**
- **Pre- Clinical Departments** - **Medical Degrees/ Dental Degrees /Veterinary Sciences Degrees**

***In addition to the above degrees Human Biology/ Medical Laboratory Sciences will be considered for the Department of Biochemistry.***

You are kindly requested to bring your original Educational and other relevant certificates along with the certified copies.

**Registrar**
**University of Jaffna**

(C-101)

### NOTICE

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**

**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

## WALK – IN - INTERVIEW

**POST OF PROJECT ASSISTANT (FULL TIME) ON CONTRACT BASIS – 02 VACANCIES**

**POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME) ON CONTRACT BASIS – 02 VACANCIES**

Walk in Interview for the above posts (Full Time) – On Contract Basis will be held as follows

| | | |
|---|---|---|
| Project Assistant | 26.08.2020 | 09.00AM to 12.00 Noon |
| Technical Assistants | 29.08.2020 | 09.00 AM to 12.00 Noon |

Walk in Interview will be held at the Mini Board Room, Administration Block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format along with relevant original certificates and the National Identity Card (NIC) on the date and the time mentioned above.

For further details please visit the University of Jaffna website **www.jfn.ac.lk**

**Registrar**

(C-103)

# மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

## அமைச்சரவை அனுமதி



**(கொழும்பு)**

**தொழில் வாய்ப்பின்றி காணப்படும் வேலையற்ற பட்டதாரிகள் மேலும் 10 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

புதிய அரசாங்கத்தின் கன்னி அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் தொழில் வாய்ப்பு கிடைக்கப்பெறாத பட்டதாரிகள் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இந்த நிலையில், அமைச்சரவைக் கூட்டம் நிறைவடைந்து ஜனாதிபதி வெளியேறிய சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பட்டதாரிகள் தங்களது முறைப்பாடுகளை ஜனாதிபதியிடம் தெரிவித்த போது, அதனை செவிமடுத்த ஜனாதிபதி, அனைவருக்கும் தொழில் வாய்ப்பு கிடைக்கப்பெறும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் பேருக்கும் தொழில் வாய்ப்பு இன்றிக்காணப்படும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்கு அமைய 50 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தன.

இதனையடுத்து, தொழில் வாய்ப்புக் கிடைக்கப்பெறாத ஏனைய பட்டதாரிகளே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-7)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# முழுமையற்ற விசாரணை அறிக்கைகளை திருப்பியனுப்பினார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான மேலும் 18 முழுமையற்ற விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பதில் பொலிஸ்மா அதிபரிடம் திருப்பி அனுப்பியுள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக சுமார் 100 விசாரணை அறிக்கைகள் இதுவரை திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜெயரத்ன தெரிவித்தார்.

எனவே விசாரணையை முறையாக முடித்த பின்னர் விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

உயிர்த்த பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக சட்டமா அதிபரினால் முழுமையற்ற விசாரணை அறிக்கைகளை பதில் பொலிஸ்மா அதிபருக்கு திருப்பி அனுப்பிய மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதியன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான 40 முழுமையற்ற விசாரணை அறிக்கைகளையும் கடந்த ஜூலை மாதம் 38 அறிக்கைகளை சட்டமா அதிபர் திருப்பி அனுப்பியிருந்தார்.

பல அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகளாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், அவை முழுமையற்றவை. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று இலங்கை முழுவதும் உள்ள 3 ஹோட்டல்களையும் 3 தேவாலயங்களையும் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு 500 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ரஷ்யாவின் கொரோனா தடுப்பூசி விரைவில் இலங்கைக்கு?

(கொழும்பு)

ரஷ்யா உருவாக்கியுள்ள கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பூசியை இலங்கைக்கும் அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி பி.மெட்டேரி தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்த்தன பொறுப்பேற்றமைக்கு அவர் வாழ்த்தும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள ரஷ்யத் தூதுவர்,

இலங்கையின் பயன்பாட்டிற்காக தடுப்பூசியை அறிமுகப்படுத்த விருப்பம் தெரிவித்ததோடு, தடுப்பூசிபெற ஆர்வமாக இருந்தால் ரஷ்யாவில் உள்ள குறித்த துறைசார்ந்த அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டின் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் இலங்கை பதிலளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸிற்கு எதிராக தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, இஸ்ரேல் என பல நாடுகளும் களமிறங்கியுள்ளன.

அந்த வகையில் ஏறத்தாழ 165 தடுப்பூசிகளை உருவாக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், கொரோனா வைரஸிற்கு எதிராக உலகின் முதல் தடுப்பூசியை தாங்கள் உருவாக்கியுள்ளதாக ரஷ்யா அறிவித்தது.

அந்த நாட்டின் இராணுவ அமைச்சகமும் கமலேயா தொற்றுநோயியல், நுண்ணுயிரியல், அறிவியல் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள இந்த தடுப்பூசிக்கு 'ஸ்புட்னிக்-5' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசி, தேவையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு விட்டதாகவும் ஆற்றல் மிக்கது, பாதுகாப்பானது, நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது என்பதெல்லாம் சோதனைகளில் நிரூபணமாகி இருக்கிறது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமின் புடின் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

## அமைச்சரவை மற்றும் இணைப்பேச்சாளர்கள் நியமனம்



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளராக அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவும் இணைப் பேச்சாளர்களாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளராக ரொஹான் வெலிவிட்ட நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி, ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் முதன் முறையாக அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள அலி சப்ரி, நாமல் ராஜபக்ஷ மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஜ-4)

# ஆட்ட நிர்ணய சதி என்னவென்று அளுத்கமகேயிடமே கேட்க வேண்டும்

## குமார் சங்கக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்தா அளுத்கமகே தெரிவித்த குற்றச்சாட்டை அவரிடமே கேட்க வேண்டுமென இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வு ஒன்றில் சங்கக்கார கலந்துகொண்டிருந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2011ஆம் ஆண்டு இந்தியாவின் மும்பையில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, தெரிவித்திருந்தார்.

இலங்கை அணி இந்த ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்களும் தன்னிடம் இருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு அதுகுறித்து விசாரணை நடத்தவும் அரசாங்கம் பணித்தது.

இதனையடுத்து விளையாட்டுத் துறையில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்கும் விசேட பொலிஸ் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்ததோடு, இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, உப்புல் தரங்க உள்ளிட்ட வீரர்கள் அழைக்கப்பட்டு அவர்களிடம் பல மணிநேரம் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அத்துடன் 2011ஆம் ஆண்டில் இலங்கை அணியின் தெரிவுக்குழுத் தலைவராக செயற்பட்ட முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வாவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

இந்த விசாரணைகள் குறித்து மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பலைகள் ஏற்பட்டன.

இதன் காரணமாக ஆட்டநிர்ணயம் இடம்பெற்றமைக்கு ஆதாரங்கள் இல்லை என அறிவிக்கப்பட்டு விசாரணைகளும் கைவிடப்பட்டன.

இந்த நிலையில், கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவிடம் ஊடகவியலாளர்கள் ஆட்டநிர்ணய குற்றச்சாட்டு குறித்து வினா எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், அந்த குற்றச்சாட்டு குறித்து முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயிடமே விளக்கம் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் அவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். (ஐ-4)

# கன்னி பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள பலத்த பாதுகாப்புடன் கொழும்பு சென்றார் பிள்ளையான்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் நேற்று கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள 9 ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் கலந்து கொள்வதற்கென நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து அதிகூடிய பாதுகாப்புடன் அவர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் இருந்த வண்ணமே நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இன்றைய தினம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற கன்னி அமர்வில் கலந்து கொள்வதற்காக விடுக்கப்பட்ட நகர்வுப் பிரேரணைக்கான கோரிக்கைகள் நீதிமன்றத்தில் ஏற்கப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் அனுமதி வழங்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிள்ளையான் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஐ-4)

# பூநகரி பிரதேசத்தில் குடிநீர் விநியோகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் நிலவும் வரட்சி நிலைமையினை கருத்திற் கொண்டு நாளாந்தம் நாற்பத்தி ஐயாயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் காணப்படும் வரட்சி நிலைமையினால் பல பகுதிகளிலும் குடிநீர் தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறு குடிநீர் தேவையுள்ள பகுதிகளுக்கான குடிநீர் விநியோகம் பூநகரி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பில் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், குடிநீர் நெருக்கடி அதிகம் எதிர்கொள்ளும் பகுதியாக பூநகரிப்பிரதேசம் காணப்படுகின்றது. இவ்வாறான பகுதிகளுக்கு பிரதேச சபையினால் நாளாந்தம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, ஆலங்கேணி, செட்டிய குறிச்சி, பரமன்கிராய், கறுக்காய்தீவு, சித்தங்குறிச்சி, பள்ளிக்குடா உள்ளிட்ட பகுதிகளுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் தினமும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதாவது 113 நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு நான்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விநியோகிப்பதற்கு தேவையான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பாரிய நெருக்கடி காணப்படுகின்றது. 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முக்கொம்பன் பகுதியிலிருந்து தற்போது தண்ணீரைப் பெற்று நாளாந்தம் சுமார் 45 ஆயிரம் லீற்றர் தண்ணீரை விநியோகித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-315)

### வன்னேரிக்குளத்தில் படர்ந்திருக்கும் ஆகாயத்தாமரை

# நன்னீர் மீன்பிடிக்கு பெரும் பாதிப்பு

## நிவர்த்தி செய்ய மீனவர் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் தண்ணீரில் படரும் ஒருவகை புல் மற்றும் ஆகாயத்தாமரை என்பவற்றால் நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதுடன் 56 வரையான மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரிய மற்றும் நடுத்தர குளங்களில் ஒன்றாக காணப்படும் வன்னேரிக் குளத்தின்கீழ் உள்ள 346 ஏக்கர் நிலப்பரப்பில் 115 வரையான விவசாயிகள் பெரும்போகம் மற்றும் சிறுபோக பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இதனை விட, மேற்படி குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடியினை நம்பி 56 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் குளத்தின் நீரேந்து பகுதியில் ஆகாயத்தாமரை எனக் குறிப்பிடப்படுகின்ற கொடி வகையும் ஒரு வகையான புல்லினமும் படர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் நன்னீர் மீன்பிடியை முன்னெடுக்கமுடியாத நிலை காணப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதாவது குளத்தின் அனைத்து பகுதிகளிலும் மீன்பிடியை மேற்கொள்ள முடியாதநிலையில் குறிப்பிட்ட பகுதிகளில் மாத்திரம் தொழிலில் ஈடுபடமுடிகின்றது. இதனால் இங்குள்ள 56 தொழிலாளர்களில் தற்போது 20 இற்கும் குறைவான தொழிலாளர்களே தொழில் செய்ய முடிகின்றது. அதிலும் சுழற்சி முறையில் தொழில்களை முன்னெடுத்து வருவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு படரும் நீர்த்தாமரை மற்றும் புல்லினம் என்பவற்றை அகற்றி சுத்தப்படுத்தினால் உரியவாறு நன்னீர் மீன்பிடியை மேற்கொள்ள முடியும் எனவும் இக்குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-4-315)

# இராசிபலன்

**20.08.2020**
ஆவணி 04, வியாழக்கிழமை
பிரதமை காலை 7.01 மணிவரை
துதியை பின்னிரவு 4.56 மணிவரை
பூரம் பின்னிரவு 2.57 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35 -3.05 மணிவரை
சந்திராஷ்டமம் அவிட்டம்

வளவன்

**மேஷம்** — சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப் புகள் வந்து சேரலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

**ரிஷபம்** — தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்** — பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப் பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்** — அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, திடீர் பயணமொன்று ஏற்படலாம், மனக் குழப்பம் அகல மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி** — விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**துலாம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்** — தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உதவிகள் உங்கள் இல்லம் தேடி வருவர், போசன நன்மையுண்டு.

**தனுசு** — பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** — உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** — இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், அலுவலகப் பணிகள் துரிதமாகும், ஆரோக்கியமான நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

காயாத பூ ஒன்று இதுவரை உலகிலே பூத்ததில்லை.

# இந்தியாவை உலுக்கும் கொரோனா

## ஒரேநாளில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பலி

(டில்லி)

**இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் நேற்று முன்தினம் ஒரேநாளில் ஆயிரத்து 89 பேர் உயிரிழந்துள்ளனர்.**



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இதன்படி நேற்று முன்தினம் ஒரேநாளில் புதிதாக 65 ஆயிரத்து 22 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 27 இலட்சத்து 66 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அத்துடன் உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 14 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் குறித்த தொற்றில் இருந்து குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 20 இலட்சத்து 36 ஆயிரத்தை கடந்துள்ளதுடன் 6 இலட்சத்து 76 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (ஜ-4)

# சீனத்தூதுவர்-வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு

(கொழும்பில்)

இலங்கைக்கான சீனத்தூதுவர் ஹூ்பேயிக்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்த்தன மீண்டும் நியமிக்கப்பட்டமைக்கு சீனத்தூதுவர் வாழ்த்துத் தெரிவித்தார்.



இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடியதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)


# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.கணபதிப்பிள்ளை நடராசா

(இளைப்பாறிய இ.போ.ச.பரிசோதகர்)

திதி: பிரதமை
20.08.2020



மலர்வு:- 19.02.1939
உதிர்வு:- 06.09.2013

நல்வழிகள் காட்டி எமை
நன்றாய் வளர்த்தவரே
ஏழாண்டு எப்படித்தான்
ஓடி மறைந்தாலும்
ஏழேழு பிறப்பெடுத்தாலும்
உங்கள் நினைவு எங்களிடம்
நீங்காத நினைவாக
என்றும் நிலைத்திருக்கும்

இல.503, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

(C-097)

## கைக்குண்டு மீட்பு



(கரணவாய்)
வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் மீன்வாடிக்கு அருகாமையில் உள்ள மணல் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.
இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-18-60)

## துர்க்காதேவி தேவஸ்தான பாதுகாப்பு நடைமுறைகள்

### - ஆறு.திருமுருகன் -

(குப்பிழான்)
கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்த் தொற்று நிலைமையைக் கருத்திற் கொண்டு நாடு முழுவதும் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களத்தினரும், அதிகாரிகளும் மேற்கொண்டுள்ளனர்.
இதனைக் கருத்திற் கொண்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவப் பெருந் திருவிழா காலப் பகுதியிலும் பல்வேறு சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.
ஆலயத்தின் நுழைவாயிலில் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டுச் சகல அடியவர்களும் கருவிகள் ஊடாகப் பரிசோதிக்கப்பட்டு ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.
ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் அனைவரும் முகக் கவசங்கள் அணிந்து வருகை தர வேண்டும். சமூக இடைவெளி பின்பற்றப்படல் வேண்டும். கைத் தொற்று நீக்கல் செய்யப்பட வேண்டும்.
ஆலயத்தில் வீண் நேரத்தைச் செலவு செய்யாது குறுகிய காலப் பகுதிக்குள் வழிபாட்டை நிறைவு செய்து அடியவர்கள் செல்ல வேண்டும்.
வழிபாட்டின் போது ஆலய உட்பகுதியில் இருக்கும் அடியவர்கள் வெளியேறிய பின்னரே வெளியே நிற்கும் அடியவர்கள் ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.
கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பேணியும் கலாசார உடை அணிந்தும் வருகைதரும் அடியவர்கள் மாத்திரமே வழிபாடுகளுக்காக ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுவர்.
பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (5-4-18)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
வேலணை வடக்கு இலந்தைவனப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறவுள்ளது.
இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5-4)

## சொற்பொழிவு

(குப்பிழான்)
நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் சிவநெறிச் செம்மல் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் "ஆறுபடையும் ஆறுபகையும்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். தற்போதைய கொரோனாத் தொற்று சுகாதார நடைமுறைகளுக்கமைய குறித்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (5-4-18)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு செல்லும் தெற்குப் புற நுழைவாயில் வளைவுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நல்லூர் கோவில் வீதியில் (கைலாச பிள்ளையார் கோவிலடி) இடம்பெற்றது. (படம்:- ஐ.சிவசாந்தன்)

## வகுப்பறை கணிப்பீட்டை விளங்கிக் கொள்ளல்

### நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)
இலங்கை பரீட்சைத் திணைக்கள பிரதி பரீட்சை ஆணையாளர் கலாநிதி திருமதி பி.எஸ்.ஸ்கந்தராஜாவின் "வகுப்பறைக் கணிப்பீட்டை விளங்கிக் கொள்ளல்" நூல் அறிமுக விழா நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் கோப்பாய் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பெரியதம்பி ஆகியோர் கலந்து கொள்வர்.
நூலின் நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணி வழங்குவார். (5)




## வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் வை.பரந்தாமன் அறிவித்துள்ளார். (5)

## குருநகர் மீனவர் இறங்கு துறையில் கள ஆய்வுப் பணிகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)
குருநகர் மீனவர் இறங்கு துறையில் படகுகளை திருத்த வேலைகளுக்காக கரையேற்றுவதற்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பான கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய நேற்று முன்தினம் குறித்த பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட மீன்பிடித் திணைக்களத்தின் அதிகாரிகள் குறித்த ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.
குருநகர் மீனவர் இறங்குதுறையை பயன்படுத்தி சுமார் 400 இற்கும் மேற்பட்ட மீனவர் படகுகள் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய படகுகளை கரையேற்றுவதற்கான பொறிமுறையை உருவாக்கித் தருமாறு சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினையடுத்து, குறித்த கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (4-5)

## திரைப்படக் கல்லூரி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண திரைப்படக் கல்லூரி திறப்பு விழா நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இல - 15 சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது. (5)



"விதையனைத்தும் விருட்சமே" குழுமம், கந்தரோடை மக்கள் முன்னேற்ற இளைஞர் கழகத்துடன் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் கடந்த திங்கட்கிழமை கந்தரோடை சுகாதார நலன்புரி நிலையத்தில் இடம்பெற்றது. (படம்:- குப்பிழான் செய்தியாளர்)



வடமாகாண இளையோர் வலுவூட்டல் வலையமைப்பின் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.பொது நூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (படம்:- அராலி செய்தியாளர்)

# தலைதூக்கியுள்ள மின்சார மாபியா

## கடுமையாக சாடிய சுனில்

(கொழும்பு)

**நாட்டில் மருந்து மாபியா, ஆயுத மாபியா, எரிபொருள் மாபியா ஆகியன காணப்படுவது போல் மின்சார மாபியா வும் தலைதூக்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

புதிய அமைச்சர் பதவியேற்றவுடன் மின்சார மாபியாவுடன்



சம்பந்தப்பட்ட தரப்பினர் மின்சாரப் பிரச்சினையைக் கையில் எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான விடயங்களைச் சுட்டிக்காட்டும் போது மக்கள் அரசாங்கத்தைக் குற்றம் சுமத்துவதாகக் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை அரசாங்கத்தைக் குற்றம் காணும் நோக்கில் சொல்லவில்லை எனவும்மாறாக மின்சாரத் துறையில் உள்ள மாபியா செயற்பாடுகளை எடுத்துக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே புதிய மின்வலு அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆணைக்குழு ஒன்றை அமைத்து இதனைத் தேடிப் பார்க்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# சைப்பிரஸ் நாட்டுக்குத் தொழில் நிமித்தம் செல்பவர்கள் தமக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என உறுதிப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக சைப்பிரஸ் நாட்டிற்கு தொழில் நிமித்தம் செல்லவிருக்கும் வெளிநாட்டவர்கள் தமக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய பிரதானமான 4 விடயங்களை அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கையிலுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நேற்று முன்தினம் செவ்வாய் அறிக்கையொன்றினை வெளியிட்டு அதில் தெரிவித்திருப்பதாவது,

குறித்த ஆவணத்தில் பரிசோதனைக்காக மாதிரி பெற்றுக் கொள்ளப்பட்டதினம், பரிசோதனை அறிக்கை முறைமை (பீ.சி.ஆர்.ஆக காணப்பட வேண்டும்), கோரிக்கையாளரின் பெயர் மற்றும் பரிசோதனையின் முடிவு என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

பீ.சி.ஆர். பரிசோதனை தவிர வேறு பரிசோதனை அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

அத்தோடு மேற்கூறிய 4 விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து (சைவ போசனம்)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 13 - செவ் 4 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. முகாமைத்துவ உதவியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் சைவ போசனம் மட்டும் வடமராட்சி தவிர்ந்த<br>தொ.இ: B/7423 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 17 செவ் 5 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உயர் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/8902 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: செவ் 1 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த அமெரிக்காவில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/7424 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 29 செவ் 7 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/8907 |
| பிறப்பு: 1974 இந்து (சைவ போசனம்)<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 37 செவ் 11 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அலுவலக உதவியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் மணமகள் அசைவமாக இருந்தாலும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/7425 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 37 செவ் 10 இல் உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: வைத்திய அதிகாரி சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் போன்றோர்<br>தொ.இ: G/8908 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியல் பட்டதாரி பொறியியலாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் 1980 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த பெண்<br>தொ.இ: B/7435 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: செவ் 10 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: மென்பொருள் பொறியியலாளர் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: லண்டனில் வேலை செய்யும் பட்டப்படிப்பு முடித்த மணமகன்<br>தொ.இ: G/8914 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)

தமிழர் தலைவர்கள் ஒன்றுசேர
தமிழர் தம் இன்னல்கள் தீர
தங்கத் தமிழனாய் தலை நிமிர்—
தலைவனாய் தரணியில் வாழ்வீர்!

வாழ்த்துவோர்:
மாற்றத்திற்கான இளையோர் அமைப்பு
புதுக்குடியிருப்பு பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டம்.

# அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் வீதி விபத்துக்களை தடுக்க முடியும்

## கிளி. அரச அதிபர் ரூபவதி



(கண்டாவளை)
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறக்கூடியதான வீதி விபத்துக்களை தடுப்பதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வீதி போக்குவரத்துக்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வைத்திய அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்கள அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர்.கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறக் கூடியதான வீதி விபத்துக்களை தடுப்பதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புக்கள் அவசியம்.

குறிப்பாக, வாகன சாரதிகள், பாதசாரிகள் உரிய வீதி ஒழுங்கு விதிகளை பின்பற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பொலிஸார், இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதல் கடந்த 10ஆம் திகதி வரை இடம்பெற்ற 98 விபத்துக்களில், டிப்பர் வாகனங்களால் 13 விபத்துக்களும்,மோட்டார்சைக்கிளால் 58 விபத்துக்களும் இடம் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக, அதிகரித்த வேகம், வளைவு, திரும்பல்களில், அவதானமற்ற சாரத்திரயம் போன்ற காரணங்களால் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன எனவும் தெரிவித்தார். (5,4,315)

# நினைவுதினம்

(குப்பிழான்)
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், நலன்புரிச் சங்கத்தின் ஸ்தாபகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் சி.சிவமகாராசாவின் பதினான்காவது ஆண்டு நினைவு தினம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந. உமாகரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவருமான இ. சர்வேஸ்வரா பிரதம விருந்தினராகவும், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (5,4,18)

# சாதாரணதர மாணவர்களுக்கான E கற்றல் வினாவிடை தரவேற்றம்

(யாழ்ப்பாணம்)
2020 டிசெம்பர் மாதம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் அடைவு மேம்பாட்டிற்கான வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கற்றல் உபகரண அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ அலகினால் (LMDMU) பிரதான பாடங்களான விஞ்ஞானம், கணிதம்,தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகியவற்றில் தரம் 10 மற்றும் 11 இற்கான பாட அலகுகளை அடிப்படையாகக் கொண்டு சுய கற்றலுக்கான இலத்திரனியல் மீட்டல் வினாக்களும் அதற்கான விடைகளும் வளவாளர்களின் உதவியுடன் ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாகாண கல்வித் திணைக்களத்தின் (LMDM UNIT YOUTU BE) இல் ஓகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை உடனுக்குடன் தரவேற்றம் செய்யப்படவுள்ளன. மேற்படி (YOU TUBE) தளத்தில் மாணவர்கள் இவற்றைப் பார்த்து பயன்படுத்திக் கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (5)

# தர்மக்கேணியில் வெடிபொருட்கள் மீட்பு நடவடிக்கையில் பொலிஸார்



(முறிகண்டி)
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தர்மக்கேணி என்னும் கிராமத்தில் வயல் விதைப்பு செய்வதற்காக காணி துப்புரவு பணியில் ஈடுபட்ட போது காணி உரிமையாளரால் சில வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் வெடி பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-100)

# காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு பாதுகாப்பு வேலி அமைக்க மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்கு உட்பட்ட கல்மடுநகர் ரங்கன்குடியிருப்பு பகுதியில் தொடரும் காட்டு யானை தொல்லையால் அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதியில் தற்போது சுமார் 110 குடும்பங்கள் உள்ளன.

அவர்கள் வாழ்வாதாரத்திற்காக தோட்டப் பயிர்ச்செய்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அரிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறான காட்டுயானை தொல்லை காரணமாக அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

அதாவது தமது கிராமத்தில் மாலை 5மணிக்கு பின்னர் காட்டுயானைகள் ஊர் மனைக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் இரவு முழுவதும் விழித்திருந்து அவற்றை பாதுகாக்க வேண்டிய நிலை காணப்படுவதாவும் தெரிவித்துள்ளதுடன் தமது பகுதியை பாதுகாக்கும் வகையில் யானை வேலிகளை அமைத்து தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5,4,315)

# துவிச்சக்கர வண்டிகளுக்கு உரிமம் வழங்கல்

(குருமன்காடு)
வவுனியா நகரசபை வளாகத்தில் நேற்று முன்தினம் நகர சபையினரினால் துவிச்சக்கர வண்டிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது.

நூலக வீதி , பூங்கா வீதி , நகரசபை வீதியூடாக பயணித்த துவிச்சக்கரவண்டிகளை நகர சபையினர் வழிமறித்து துவிச்சரவண்டிகளுக்கான உரிமத்தினை 15ரூபாய் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தனர்.

உரிமைப்பத்திரத்தில் துவிச்சக்கரவண்டியின் வகை , துவிச்சக்கரவண்டியின் அளவு , துவிச்சக்கரவண்டியின் இலக்கம் என்பன பதியப்பட்டதுடன் அதன்பின்னர் துவிச்சக்கர வண்டிகளில் பொருத்துமாறு இலக்கத்தகடும் வழங்கப்பட்டது. (4.5.250)



**கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்களான எஸ்.சேரலாதன், ரிசானி சேரலாதன் ஆகியோர் அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வழங்கினர். (5,350)**

# ச.ச.நிலையங்களின் சமாசம் உருவாக்கப்படல் வேண்டும்

## நகரசபை உறுப்பினர் வேண்டுகோள்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து சனசமூக நிலையங்களின் சமாசம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 24 சனசமூக நிலையங்கள் நகரசபையின் பதிவில் உள்ளன. ஆனால் இங்கு சனசமூக நிலையங்களின் சமாசம் இல்லை.

வேறு பிரதேசங்களில் அக்கட்டமைப்பு உள்ளது. சமாசம் ஒன்றினை உருவாக்கும் பட்சத்தில் சனசமூக நிலையங்களுக்கான தேவைகள் தொடர்பில் உடனடியாகவும், இலகுவாகவும் அறிந்து கொள்ள முடியும்.

நகரசபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சனசமூக நிலையங்களின் சமாசம் ஒன்று அமைய ஊக்குவிக்க வேண்டும்.

அத்துடன் இதுவரை வருடக்கூட்டம் இடம்பெறாத சனசமூக நிலையங்கள் கூட்டத்தைக்கூடி சனசமூக நிலையங்களை இயங்கு நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

# சஹ்ரான் மற்றும் அவரது சகாக்களுக்கு இந்தியா பாதுகாப்பான புகலிடமாக இருந்தது

## நிலந்த ஜயவர்த்தன சாட்சியம்



(கொழும்பு)

**தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரது சகாக்களுக்கு இந்தியா ஒரு பாதுகாப்பான புகலிடமாக இருந்தது என தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் இயக்குநர் நிலாந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சஹ்ரானும் அவரது சகாக்களும் பலமுறை இந்தியாவுக்குச் சென்றதாகவும், தாக்குதல்களுக்கு முன்னர் அங்கேயே தங்கியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஏப்ரல் நான்காம் திகதி வெளிநாட்டு புலனாய்வு அமைப்பொன்று தெரிவித்த தகவலில், சஹ்ரான் குழுவினர் தாக்குதலுக்கு தயாராகியுள்ளனர் என தெரிவிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சஹ்ரானின் குழுவினரால் ஆயுதங்கள் சேகரிப்பது குறித்து தகவல் பெறவில்லை என்றும், நுவரெலியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் முஸ்லிம்களின் ஒரு குழுவுக்கு சஹ்ரான் ஆயுதப் பயிற்சி அளித்ததாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

---

# சுதேச கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு ஆக்கத்திறன் வாய்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளவும்

## ஜனாதிபதி துறைசார்ந்தவர்களுக்குப் பணிப்பு

(கொழும்பு)

சட்டதிட்டங்களுக்குள் முடங்கி நாட்டின் பாரம்பரிய கைத்தொழில்கள் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் குறித்த கரிசனையற்ற சட்டங்களை ஆக்குவதன் மூலம் கைத்தொழில் துறையும் சுதேச கைத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி தவறு செய்யும் சிறு பிரிவினர் காரணமாக சட்ட ரீதியாக கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிப்படைவதற்கு இடமளிக்கக்கூடாதென்றும் தெரிவித்தார்.

பிரம்பு, பித்தளை, மட்பாண்டம், மரப்பாண்டம் மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுதேச கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு அதிகாரிகள் ஆக்கத்திறன் வாய்ந்த வகையில் செயற்படுவது அவசியமாகும். அடிமட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் கீழ் மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

நீண்டகாலமாக உரிய கவனம் செலுத்தப்படாதிருக்கும் பாரம்பரிய கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வது திட்டமிட்ட வகையில் செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு துறை தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி இராஜாங்க அமைச்சு கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டிருப்பது இதன் காரணத்தினாலேயே. அரச அனுசரணை கிடைக்காத காரணத்தினால் பாரம்பரிய கைத்தொழிலாளர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த தேர்தல் காலத்தில் நாடு பூராகவும் சுற்றுப் பயணம் மேற்கொண்டதில் அதனை தெளிவாகக் கண்டுகொண்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்களின் முக்கியத்துவம் பற்றி பாடசாலை பருவத்திலிருந்து பிள்ளைகளுக்கு தெளிவுகள் வழங்கப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கும் பாரம்பரிய கைத்தொழில் பொருத்தமான தலைப்பாகும். அதனூடாக இக்கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு அதிக பங்களிப்பை வழங்க முடியும்.

விவசாயத்துக்கு ஒவ்வாத தரிசு நிலங்கள், பிரம்புகள் போன்ற கைத்தொழில் துறைக்கு தேவையானவற்றை பயிரிடுவதற்காக பயன்படுத்த முடியும். ஊதுவர்த்திகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூங்கில் குச்சிகளை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் அதிக பணம் செலவிடப்படுகின்றது.



அவற்றை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலம் வெளிநாடுகளுக்கு செல்லும் நிதியை மீதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

கைத்தொழில் துறை அமைச்சர் விமல் வீரவன்ச, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, கைத்தொழில் துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் உபசேன திஸாநாயக்க, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் சுதத் அபேசேகர ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ஜ-4)

---

# சரியான தொடர்பாடல் இன்மையே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணம்

## - ருவான் விஜயவர்த்தன -

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர்காலத்தில் ஒன்று சேர்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ஐக்கியதேசியக்கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமை வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார் என்றும் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான தகவல் பரிமாற்ற குறைபாடே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை தடுக்க முடியாமைக்கான காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சஹ்ரான் ஹாசிம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சமூக ஊடகங்களில் செய்தி வெளியானபோதும் அது தொடர்பான தகவல்கள் தமது அரசாங்க காலத்தில் கிடைத்திருக்கவில்லை எனவும் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார். (ஜ-4)

# சிங்கப்பூரின் சுதந்திரத்திற்குப் பின் தொடர்ந்து இடைவிடாமல் ஆட்சியில் இருந்து வரும் லீயின் மக்கள் செயல் கட்சி - ஒரு பார்வை

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





ஜே.பி.ஜெயரத்தினம்

1984 பொதுத்தேர்தலில் மீண்டும் தெரிவு செய்ப்பட்டார். 1986 இல் இவர் உறுப்பினர் பதவியை இழந்தார். ஜெயரத்தினம் பின்னர் 1988 முதல் 2001 வரை நாடாளுமன்றத்தின் தொகுதியில்லா நாடாளுமன்ற நியமன உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர்கள் (Non-Constituency Member of Parliament)

1984 ஆம் ஆண்டில், பாராளுமன்றத்தில் தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர்களை அறிமுகப்படுத்துவதற்கான வழி வகுக்க அரசியலமைப்பு திருத்தப்பட்டது. பொதுத் தேர்தலில் ஒருவர் தான் போட்டியிட்ட தொகுதியில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் குறைந்தது 15% இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று தோல்வி அடைந்தும் எதிர்க்கட்சியிலும் இருந்தால் அவர் தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படும். நாடாளுமன்றத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்போதுமே இடம்பெற்றிருப்பதை தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர் முறை உறுதி செய்கிறது.

2020 ஆம் ஆண்டுத் தேர்தலில் இருந்து பன்னிரண்டு எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்குக் குறைவாகவே பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், எதிர்க்கட்சி வேட்பாளர்களிடையே அதிக வாக்கு எண்ணிக்கையில் தோற்றவர்கள் தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று அறிவிக்கப்பட்டு மொத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை பன்னிரண்டாக உயர்த்தப்படும். நாடாளுமன்ற பதவிக் காலத்திற்கு தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர் தமது இருக்கையைத் தக்க வைத்துக் கொள்வார். அப்பெயர் குறிப்பிடுவதைப் போல, தொகுதியில்லா உறுப்பினர் எந்தத் தொகுதியையும் பிரதிநிதித்துவம் செய்யமாட்டார். இந்த முறை

தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர்கள்
அட்டவணை - 4

| ஆண்டு | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1984 | 3 | 2 | 1 | 0 | 1 |
| 1988 | 3 | 1 | 2 | 1 | 0 |
| 1991 | 3 | 4 | 0 | - | - |
| 1997 | 3 | 2 | 1 | 1 | 0 |
| 2001 | 3 | 2 | 1 | 1 | 0 |
| 2006 | 3 | 2 | 1 | 1 | 0 |
| 2011 | 9 | 6 | 3 | 3 | 0 |
| 2015 | 9 | 6 | 3 | 3 | 1 |
| 2020 | 12 | 10 | 2 | ? | ? |

A-ஒதுக்கப்பட வேண்டிய ஆகக் கூடுதலான உறுப்பினர்களின் எண்ணிக்கை. B-தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட எதிர்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, C-குறித்த எண்ணிக்கையை பூரணப்படுத்த ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, D- எதிர்கட்சிகளால் ஏற்றுக்கொள ளப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, E- எதிர்கட்சிகளால் ஏற்க மறுத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 12 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செல்ல வாய்ப்பளித்துள்ளது. இவ் விபரத்தை அட்டவணை -4 காட்டுகிறது. எதிர்க்கட்சிகள் இவற்றை சரியாகப் பயன்படுத்தினால் அவர்கள் எழுச்சி பெற முடியும்.

இவ்வாறு எதிர்க்கட்சிகளுக்கு தொகுதியில்லா உறுப்பினர்கள் வழங்கப்பட்டாலும் சில எதிர்க்கட்சிகள் ஏற்க விரும்புவதில்லை. இது அவர்களின் எதிர்மறையான நோக்கல் ஆகும். இச் செயல் முறையிலுள்ள நன்மைகளை எதிர்க்கட்சிகள் சரியாக புரிந்து கொள்ளவில்லை போல் தெரிகிறது. 1991 ஆம் ஆண்டுத் தேர்தலில் தொகுதியில்லா உறுப்பினர்கள் ஒதுக்கப்படவில்லை. காரணம் அந்தத் தேர்தலில் ஒதுக்கப்பட்ட தொகுதியில்லா நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை (3) விட தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை (4) அதிகமாகும். 2020 ஆம் ஆண்டுத் தேர்தலில் தொகுதியில்லா உறுப்பினர்கள் ஒதுக்கீடு 2 ஆகும். இது எந்த எதிர்க்கட்சிக்குக் கொடுப்பது என்பது இன்னும் முற்றுப்பெறவில்லை.

## எதிர்க் கட்சிகள் எழுச்சி பெறுமா?

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கவனித்து அச்செயற்பாடுகளின் சாதக, பாதகங்கள் குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதும் கேள்வி எழுப்புவதுமே நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் பொதுவான பணி. அரசின் செயற்பாடுகள் மக்களுக்கும் நாட்டின் நலனுக்கும் பாதகமில்லாமல் இருப்பதை உறுதி செய்வதே இதன் அடிப்படை நோக்கம். சில அரசாங்கங்கள், முக்கிய பிரச்சினைகளில்கூட எதிர்க்கட்சிகளைக் கருத்துக்கூற வாய்ப்பளிக்காமலும் அவர்களது கருத்துக்களை கணக்கில் எடுக்காமலும் தன்னிச்சையாகச் செயற்படுவதையும் சில நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது. எதிர்க்கட்சி பலமின்றி இருக்கும் வேளைகளிலேயே இது பெரும்பாலும் சாத்தியமாகிறது.

சிங்கப்பூரின் முக்கிய எதிர்க்கட்சிகளாக தொழிலாளர் (பாட்டாளிக்) கட்சி, முன்னேற்ற சிங்கப்பூர் கட்சி, சிங்கப்பூர் மக்கள் கட்சி, சீர்திருத்தக் கட்சி, சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதுவரை இவற்றில் சில கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஒரு சில இடங்களைப் பிடித்துள்ளன. பல தேர்தல்களில் பல தொகுதிகளில் போட்டியிடுவதையும் தவிர்த்துள்ளன.

அதற்கு அவர்கள் கூறும் காரணங்களாக தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயங்கள், தேர்தல் முறைமை போன்றவற்றைக் குறிப்பிடுகிறார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு 16 ஆண்டுகள் கழித்து தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த ஜே.பி.ஜெயரத்னம் 1981 இடைத்தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்தின் முதல் எதிர்க்கட்சி உறுப்பினரானார். எதிர்க்கட்சிகள் 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஒட்டு மொத்தமாக 34% மக்கள் வாக்குகளைப் பெற்றிருந்தாலும் 2 இடங்களையே பெற்றது. இதேபோல் 2001 ஆம் ஆண்டில் 84 ஆசனங்களுக்கு தேர்தல்கள் நடந்த போதும் 55 ஆசனங்களுக்கு எதிர்க்கட்சிகள் தேர்தலில் போட்டியிடவில்லை. நடந்த முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் மொத்தமாகப் பெற்ற வாக்கு வீதம் (C), மொத்தமாகப் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை (D), தேர்தலில் போட்டியிடாத ஆசனங்களின் எண்ணிக்கை (E) ஆகியவை அட்டவணை-5 தரப்பட்டுள்ளன.

இவ் அட்டவணையில் 1991,2011, 2020 ஆகிய தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது அம் மூன்று ஆண்டுகளிலும் எதிர்க்கட்சிகள் கிட்டத்தட்ட 40% மான வாக்குளைப் பெற்ற போதும் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் வீதம் 1991 இல் 5%, 2011 இல் 7% மற்றும் 2020 இல் 11% ஆகும். இதற்குக் காரணம் எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடு என்று கூறலாம்.

ஆனால் இந்த முறைமையிலுள்ள நல்ல அம்சம் என்னவெனில், சிங்கப்பூர் அரசாங்கம் கூறுவது போன்று குழுத் தொகுதிகளில் சிறுபான்மை இனங்களுக்கு கட்டாய இட ஒதுக்கீடு செய்யப்படுவதாகும். இதனால் சிறுபான்மை இனங்களின் வாக்குரிமை பலம் பெறுவதோடு அவர்களின் அரசியல் உரிமையும் பாதுகாக்கப்படுகின்றது. உதாரணமாக சிங்கப்பூரில் தமிழர்களின் சனத்தொகை கிட்டத்தட்ட 5% என்று கொள்ளலாம்.

ஆனால் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகும் தமிழர்களின் வீதம் கிட்டத்தட்ட 8% இலும் கூடவாகும். எனவே இம் முறைமை சிறுபான்மை இனங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும்.

(தொடரும்...)

# கஞ்சா பயிரிட நடவடிக்கை எடுக்கப்படும்!

## தேரரின் கோரிக்கை ஏற்கப்பட்டது





(கொழும்பு)
பெங்கமுவே நாலக தேரரின் கோரிக்கைக்கு அமைய இலங்கையில் கஞ்சா பயிரிடுவதை சட்டமாக்க தேவையான வேலைத்திட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சுதேச மருத்துவம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அரச ஆயுர்வேத மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பெங்கமுவ நாலக தேரர், நாட்டை மிகவும் நேசிப்பவர். கடந்த காலத்தில் தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்தவர்.

இதனால், இப்படியான பிக்குமார் மற்றும் நிபுணர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொண்டு அவர்களின் யோசனையை நாட்டுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

முதலாவது நடவடிக்கையாக சுதேச மருத்துவத்திற்கு தேவையான மூலப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக ஆயிரம் மருத்துவ கிராமங்களை உருவாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் கிராம மக்களுக்கு வருமானம் கிடைக்கும் வகையில் நாட்டில் பயிராகும் அனைத்து செடிகளையும் வளர்க்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு எனவும் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மேலும் தெரிவித்துள்ளார்.(ஐ-4)

# சிகரெட், மதுபானப்போத்தல் விற்பனைக்குத் தடை

## புதிய சட்டம் உருவாக்கம்

(கொழும்பு)
சில்லறையாக தனி சிகரெட் மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் விற்பனை ஆகியவற்றை தடை செய்யும் புதிய சட்டத்தை உருவாக்குமாறு புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது இடங்களில் புகைப் பிடிப்பவர்களுக்கு எதிராக இனி கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தேசிய அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் சமுதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மதுபான விற்பனையில் 180 மில்லி லீற்றர் (அரை போத்தல்) அதிகளவில் விற்பனை செய்ய இதனால் அதிகளவில் சமூகவிரோத செயற்பாடுகளும் சுற்றுப்புறச் சூழலும் பெரிதளவும் பாதிக்கப்படுகிறது.

நாட்கூலி பெறுபவர்களின் அன்றாடத் தேவையாகவும் 180 மில்லி லீற்றர் மதுபானப் போத்தல்கள் காணப்படுகின்றன.

தனி சிகரெட் விற்பனையைத் தடை செய்ய வேண்டும் என்ற யோசனையை கடந்த அமைச்சரவையில் இரண்டு முறை முன்வைத்தோம் ஆனால் எவ்வித முன்னேற்றகரமான தீர்மானங்களும் கிடைக்கப் பெறவில்லை.

மதுபானம், புகைத்தல் ஆகியவற்றுக்கான வரி அதிகரிக்கப்பட வேண்டும். இவ்விரு விடயங்களினால் அரசாங்கம் ஒருபுறம் அதிக வருவாயை ஈட்டினாலும் இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு வருவாயை காட்டிலும் இரு மடங்கான நிதியை செலவிடுகிறது.

தனி சிகரெட் விற்பனை மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபானப் போத்தல் விற்பனை ஆகியவற்றைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைப் புதிய அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம். சாதகமான தீர்வு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம். அத்துடன் வெற்றிலை கூறு விற்பனை தொடர்பிலும் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பொது இடங்களில் புகைப் பிடிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# மரக்கறி எண்ணெயில் கலப்படம் இதயநோய் ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)
மரக்கறி எண்ணெய் என்ற போர்வையில் சந்தையில் விற்கப்படும் எண்ணெயால், இதய நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சிரிமல் பிரேமகுமார எச்சரித்துள்ளார்.

அத்தகைய எண்ணெயின் பல மாதிரிகள் மனித உடலுக்கு ஆரோக்கியமற்ற கூறுகளைக் கொண்டிருப்பதைத் தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்ட சோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் இந்த நிறுவனத்திடம் இல்லை என்பதால், இவ்விடயம் தொடர்பில் நுகர்வோர் விவகார ஆணையத்திற்குத் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

மரக்கறி எண்ணெயாக விற்கப்படும் இத்தகைய எண்ணெய்களில் அதிக அளவு டிரான்ஸ் கொழுப்பு அமில அளவு உள்ளது, இது இயற்கை மரக்கறி எண்ணெயில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, "மரக்கறி எண்ணெய்" என விற்கப்படும் எண்ணெய்கள் உண்மையில் வெளிநாடுகளில் உள்ள ஹோட்டல்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு, அவை சுத்திகரிக்கப்படுவதற்கு முன்பு, இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு, பல்வேறு வகையில் விற்கப்படுவதாக டாக்டர் சிரிமல் பிரேமகுமார தெரிவித்தார். (ஐ-4)

# தேரரை கைது செய்ய சிறப்பு நடவடிக்கை

(கொழும்பு)
எங்கள் சக்தி மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் வெதினிகம விமல திஸ்ஸ தேரரை கைதுசெய்வதற்கு கண்டி பொலிஸார் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



இரண்டு மாதங்களுக்கு முன்னர் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலைப் பொருட்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக அவரைக் கைதுசெய்ய பல வாரங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அஸ்கிரிய மகா விகாரை வளாகத்தில் சட்டவிரோத அகழ்வாராய்ச்சி நடவடிக்கைக்காக விமல திஸ்ஸ தேரரால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக, விகாரையின் தலைமை தேரர் கலங்குட்டியா ராகுலா தேரர் அளித்த முறைப்பாட்டுக்கு அமையவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

# அரசியல் வரலாற்றில் முதன்முறையாக
## ஐ.தே.க.இன்றி இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்குச் செல்லவுள்ள உறுப்பினர் யார் என்பது குறித்து இதுவரையில் எவ்விதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் எவருமே இன்றி அமர்வொன்று இடம்பெறவுள்ளமை இதுவே முதன் முறையாகும்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பொதுத் தேர்தல் நிறைவடைந்து இரு வாரங்கள் கடந்துள்ள போதிலும் ஐக்கிய தேசிய கட்சி தனக்குக் கிடைத்துள்ள தேசியப் பட்டியல் மூலம் யாரை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது என்பது குறித்து இறுதித் தீர்மானத்தை அறிவிக்கவில்லை.

இறுதிக் கட்டத்திலேனும் ஏதேனும் தீர்மானங்கள் எடுக்கப்படுமா? என்று பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், தேசியப் பட்டியல் ஊடாக யாரை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எதிர்வரும் வாரங்களில் இதற்கான தீர்வினைக் காண எதிர்பார்த்துள்ளோம்.

இறுதித் தீர்மானம் எடுத்ததன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஸ்திரமானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று பதிலளித்தார். (ஐ-4)

# குணமடைந்தோர் 2760

(கொழும்பு)
நாட்டில் மேலும் 5 கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோயாளர்கள் பூரணமாகக் குணமடைந்து நேற்று வீடுகளுக்குச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,760 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 131 கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் இதுவரை 2,903 பேர் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# அதிபரின் நெகிழ்ச்சி செயல்

(வாகரை)
மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தில் பின்தங்கிய கிராமமொன்றில் தொடர்ந்து பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களின் காரணத்தினை அறிந்த அதிபர் சலூன்காரராக மாறிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் பின்தங்கிய கட்டுமுறிவு கிராமத்திலுள்ள கட்டுமுறிவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ஜே.ஜீவனேஸ்வரன் பாடசாலை வருவதற்கு தலைமுடி ஒரு தடையாக இருக்கக் கூடாதென முடி வெட்டுபவராக மாறி இந்த மனித நேயப்பணியினை செய்துள்ளார். (ஐ-4)

# பாரதம்

# கொரோனா தடுப்பூசியை இந்தியாவில் தயாரிப்பதில் ரஷ்யா தீவிரம்





(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசியை தயாரிப்பதில் ரஷ்யா தீவிரம் காட்டி வருகின்றது.

ரஷ்யா மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இந்தியாவிலும் இதன் உற்பத்தியைத் தொடங்கலாம் என்று ஆலோசனை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி மருந்து தயாரிப்புக்கு நிதி வழங்கும் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான டிமிட்ரேவ் இந்தியாவிலும் மருந்து உற்பத்தியைத் தொடங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி தமது பேச்சில் இந்தியாவில் மருந்து உற்பத்தி செய்வதற்கு வரவேற்பு அளித்துள்ளார். ஏற்கனவே இந்தியாவில் மிகப் பெரிய மருந்து நிறுவனங்கள் இருப்பதாக தெரிவித்த அவர், கொரோனாவுக்கான தடுப்பு மருந்து தயாரிப்பதற்கான சாத்தியங்கள் இந்தியாவில் அதிக அளவில் இருப்பதாகவும் புமிட்ரேல் தெரிவித்தார்.

கொரோனாவுக்கான மருந்து தயாரிக்கும் போட்டியில் பாதுகாப்பு பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்படுவதாக வந்த விமர்சனங்களையும் புறந்தள்ளிய டிமிட்ரேவ் ரஷ்யா தயாரிக்கும் தடுப்பு மருந்து பாதுகாப்பானது எனவும் உறுதியளித்துள்ளார். (2)

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம் ஒருவர் உயிரிழப்பு



(மணிலா)

மத்திய பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நிலநடுத்தால் பலர் காயமடைந்துள்ளதோடு வீடுகள் சேதமாகியுள்ளன.

கொரோனா வைரஸ் தனிமைப் படுத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு கட்டடங்கள், பாலங்கள் மற்றும் துறைமுகம் சேதமடைந்துள்ளது. கடலோர நகரமான கேடிங்கனில் மூன்று மாடிகளைக் கொண்ட வீடு இடிந்து விழுந்துள்ளது.

ஒரு ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்.

நிலநடுக்கத்தால் மஸ்பேட் மாகாணத்தில் 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அனர்த்த நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கேடிங்கனில் சேதமடைந்த இரண்டு அரசாங்க கட்டடங்களில் கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்ட 100 இற்கும் மேற்பட்டோர் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக சிவில் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸின் கேடிங்கன் நகரத்தில் இருந்து சுமார் 21 கிலோமீற்றர் தொலைவில் 6.6 ரிக்டர் அளவுகோலில் இந்நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நிலநடுக்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கங்கள் அதிகம் ஏற்படும் பசுபிக் நெருப்பு வளைய பகுதியில் பிலிப்பைன்ஸ் உள்ளதோடு, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 சூறாவளி மற்றும் வெப்பமண்டல புயல்களால் தாக்கப்படுகிறது. இது உலகின் மிக பேரழிவுக்குள்ளான நாடுகளில் ஒன்றாகும். (2)

# ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜோபிடன் அதிகாரபூர்வமாக அறிவிப்பு

(வோஷிங்டன்)


அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜோபிடன் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் நவம்பர் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், 2 ஆவது முறையாக போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோபிடன் ஜனாதிபதி பதவிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதி பதவிக்கும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரை அதிகாரபூர்வமாக தேர்வு செய் யும் கட்சி மாநாடு, ஒன்லைன் மூலம் நடைபெற்றது. இதில் ஜோபிடன் அதிகாரபூர்வ வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநாட்டின் முடிவில், ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜோபிடன் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் ட்ரம்ப் உருவாக்கிய குழப்பங்களை சரி செய்ய ஜோபி டனுக்கு அனுபவமும் ஆற்ற லும் இருப்பதாக ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்துள்ளனர். (2)

# சீனாவின் யாங்சே ஆறு பெருக்கெடுப்பு ஒரு இலட்சம் மக்களை வெளியேறுமாறு உத்தரவு







(பீஜிங்)

சீனாவின் யாங்சே ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை வெளியேறுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இந்த வெள்ளம் 1,200 ஆண்டுகள் பழைமையான உலக பாரம்பரிய தளத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆற்று வெள்ளம் காரணமாக தென்மேற்கு சிச்சுவான் மாகாணத்தில் யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமான 71 மீற்றர் லொஷன் ஜெயண்ட் புத்தர் சிலையை பாதுகாக்க ஊழியர்கள், பொலிஸார் மற்றும் தன்னார்வலர்கள் மணல் மூட்டைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஏனெனில் 1949 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன் முறையாக வெள்ள நீர் புத்தர் சிலையின் கால் விரல்கள் அளவுக்கு உயர்ந்துள்ளமையினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

லொஷன் ஜெயண்ட் புத்தர் சிலை என்பது மைத்ரேய புத்தரைச் சித்திரிக்கும் வண்ணம் தாங் அரசமரபு காலத்தில் 713 மற்றும் 803 ஆண்டுகளுக்கு இடையில் கட்டப்பட்ட ஒரு உயரமான கற்சிலையாகும்.

இது சீனாவின் சிச்சுவான் மாகாணத்தின் தெற்குப் பகுதியில், லெஷன் நகரத்திற்கு அருகில், மின்ஜியாங், சிங்யீ மற்றும் தாது ஆறுகள் கூடுமிடத்தில், லிங்யுன் மலையிலுள்ள சுண்ணாம்பு காலச் செம்மண் படிம மணற் கற்களின் முகப்புப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளது. (2)

# வெளிநாடு

## மாலியில் இராணுவப் புரட்சி

# ஜனாதிபதி, பிரதமர் துப்பாக்கி முனையில் கைது

# இருவரையும் விடுவிக்குமாறு ஐ.நா.கோரிக்கை

(பமாகோ)

**மாலியில் இராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ளதையடுத்து ஜனாதிபதி இப்ராகிம், பிரதமர் பவ்பவ் சீஸ்சே ஆகியோரை துப்பாக்கி முனையில் இராணுவத்தினர் கைது செய்தனர்.**





பயங்கரவாதத்தை தடுக்க தவறியதாகவும் தேர்தலில் முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் ஜனாதிபதி இப்ராகிம் மீது தொடர்ச்சியாக குற்றம் சாட்டப்பட்டு வந்ததுடன். இப்ராஹிம் பவுபக்கர் கெய்டாவிற்கு எதிராக இரண்டு மாதங்களாக போராட்டம் நடந்து வந்தது.

இந்த நிலையிலேயே அவர் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பில் உரையாடிய இப்ராஹிம் பவுபக்கர், தமது பதவியை இராஜினாமா செய்வதாகவும் தமது அதிகாரத்திற்காக மக்கள் இரத்தம் சிந்துவதை தாம் விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இதேவேளை, இது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் தெரிவிக்கையில், மாலியில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை ஐ.நா. உன்னிப்பாக கவனித்து வருகிறதென தெரிவித்தார்.

முதலில் ஜனாதிபதி இப்ராஹிம் பவுபக்கர் கெய்டாவை எந்த நிபந்தனையும் இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் அங்கு மீண்டும் அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

# அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்கம் 1 இலட்சத்து 75 ஆயிரத்தை தாண்டியது உயிரிழப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றினால் கிட்டத்தட்ட56 இலட்சத்து 56 ஆயிரத்து 204 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அத்தோடு மேலும் 1 இலட்சத்து 75 ஆயிரத்திற்கு அதிகமானோர் கொரோனத்தா தொற்றினால் உயிரிழந்துவிட்டனர் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

அந்த வகையில் கொரோனா வைரஸ் தொற்றினால் அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலேயே அதிகளவிலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (2)

# ஆப்கானிஸ்தானில் சுதந்திரதின நிகழ்வு பாதுகாப்பை மீறி பீரங்கி குண்டுத் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் 101 ஆவது சுதந்திர தினத்தன்று காபூலில் சரமாரியாக பீரங்கிக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் உள்நாட்டு போரால் அங்கு தொடர்ந்து அசாதாரண சூழ்நிலை நிலவுகிறது. இந்த நிலையில் மோசமான பாதுகாப்பு நிலைக்கு மத்தியில் நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானின் 101 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி தலைநகர் காபூலில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அதையும் மீறி காபூலில் சரமாரியாக பீரங்கிக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

காபூலில் வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களில் 2 வாகனங்களிலிருந்து பயங்கரவாதிகள் தொடர்ச்சியாக பீரங்கிக் குண்டுகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டனர். கிழக்கு மாவட்டத்தில் வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் ஏராளமான பீரங்கிக் குண்டுகள் வீசப்பட்டதாகவும் வடக்கு மாவட்டத்தில் குடியிருப்பு கட்டடங்கள் மீது தாக்குதல் நடந்ததாகவும் ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த பீரங்கிக் குண்டு தாக்குதல்களில் 4 சிறுவர்கள் உட்பட 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அதேசமயம் இந்த தாக்குதல் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என தலீபான் பயங்கரவாத அமைப்பின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.



இதனிடையே பீரங்கிக் குண்டு தாக்குதலுக்கு மத்தியிலும் சுதந்திர தினத்தையொட்டி தலைநகர் காபூலில் இராணுவ அமைச்சக வளாகத்துக்குள் உள்ள சுதந்திர தின நினைவுச் சின்னத்தில் ஜனாதிபதி அஷ்ரப்கனி உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தினர். (2)

# சிங்கராஜ வனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் வீதி மேம்பாட்டு பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்துக

## ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

**உலக வரலாற்று சின்னமான சிங்கராஜ வனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி மேம்பாட்டுப் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.**



இது தொடர்பாக இலங்கையின் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் முறையிட்டமையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வீதி மேம்பாட்டு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சிங்கராஜ உலக பாரம்பரிய தளத்திற்குள் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டமை குறித்து ஐக்கிய நாடுகளின் கல்வி. அறிவியல் மற்றும் கலாசார அமைப்புக்கு (யுனெஸ்கோ) முறையிட்டிருந்தது.

இலங்கையின் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரவீந்திர காரியவசம். யுனெஸ்கோவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் லங்காகம முதல் தெனியாய வரையில் இந்த வீதி அமைப்பு மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக் காட்டியிருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பொறியியல் பணியாளர்கள் கடந்த 10 ஆம் திகதி முதல் இந்த வீதி மேம்பாட்டுப் பணிகளை ஆரம்பித்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

2013 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோதும் யுனெஸ்கோவால் அது நிறுத்தப்பட்டது.

வெப்ப வலயத்தில் அமைந்துள்ள சிங்கராஜ வனம் இலங்கையின் கன்னி மழைக்காடுகளை கொண்டது.

இது 1978 ஆம் ஆண்டில் உலக உயிர்க் கோள பாதுகாக்கப்பட்ட மையமாகவும் 1989 இல் உலக பாரம்பரிய தளமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டது. (ஜ-4)

# இலங்கை உட்பட 14 நாடுகளுடன் விசேட விமான சேவையை முன்னெடுக்க இந்தியா பேச்சுவார்த்தை

(டில்லி)

இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பான சர்வதேச விமானப் போக்குவரத்து தொடர்பாக இலங்கை உட்பட 14 நாடுகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அந்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுடன் ஏற்கனவே இந்த விமான பயண ஒப்பந்தங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் அதன் அயல் நாடுகளான இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் Air bubbles எனப்படும் இரு தரப்பு விமான போக்குவரத்து ஒப்பந்தத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதாக இந்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா. இத்தாலி, ஜப்பான், நியூசிலாந்து, நைஜீரியா. பஹ்ரைன். இஸ்ரேல். கென்யா. பிலிப்பைன்ஸ், ரஷ்யா. சிங்கப்பூர். தென் கொரியா மற்றும் தாய்லாந்து ஆகியவை இதில் அடங்கும் என்று பூரி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயர்வோம்

ஒருத்தர் ஒரு தவறு செய்துவிடுகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே நீ செய்தது தவறு என்று சொல்கிறது ஒருவகை. அதற்குப் பதிலாக எது சரி என்று அவர் புரிந்துகொள்ள உதவி செய்கிறது இன்னொரு வகை.

இந்த இரண்டாவது வகை இருக்கு பாருங்கள்... நிர்வாக இயலிலே இது மிகவும் முக்கியம். அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற ஒருத்தர் முக்கியமாக தெரிந்திருக்க வேண்டியது என்ன தெரியுமா?

சக ஊழியர்களிடம் எப்படிப் பழக வேண்டும்? மேலதிகாரிகளிடம் எப்படிப் பழக வேண்டும்? தனக்குக் கீழே வேலை செய்பவர்களிடம் எப்படிப் பழக வேண்டும்? வாடிக்கையாளர்களிடம் எப்படிப் பழக வேண்டும்?

இவர்கள் எல்லோரிடமும் செம்மையான உறவை ஏற்படுத்தி இருக்கிறது எப்படி? இதையெல்லாம் சொல்லிக் கொடுக்கின்ற பாடம் தான் திறமையான உறவு என்பது.

எந்த வேலையிலே இருந்தாலும் சரி... இந்த.. " உறவுகளை வளர்க்கும் திறன் " உள்ளவர்கள் சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடுகின்றார்கள்.

மற்றவர்களிடம் உறவை பலப்படுத்திக் கொள்கிறது எப்படி என்று தெரிந்து கொண்டோமானால் எந்தவொரு தடையையும் சுலபமாக தாண்டி.. செய்கின்ற தொழிலிலே முன்னுக்கு வந்துவிடலாம்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலே ஒரு கணக்கெடுப்பு செய்து பார்த்தார்களாம். பார்க்கிற வேலையிலே எதுமாதிரி குணாதிசயம் உள்ளவர்கள் வேகமாக முன்னுக்கு வருகின்றார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக இந்த கணக்கெடுப்பு.

வெவ்வேறு துறையிலே வேகமாக முன்னுக்கு வந்திருக்கின்ற பலபேரை சந்தித்து இந்த "சர்வேயை நடத்தியிருக்கின்றார்கள். அவர்கள் கண்டுபிடித்து சொல்லியிருக்கின்ற உண்மை என்ன தெரியுமா?"

ஒருத்தர் ஒரு வேலையிலே இருந்தால்... அது சம்பந்தப்பட்ட சப்ஜெக்ட் பற்றி அறிவு 35 சதவீதம் இருந்தால் போதும்.

ஆனால் உறவுகளை வளர்க்கும் திறன் 65 சதவீதம் வேண்டும். இப்படி உள்ளவர்கள் சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடுகின்றார்கள்.

அதனாலே ஒருத்தருக்கு வேலை சரியாக புரியவில்லை என்றால்கூட விபரமாக மற்றவர்களிடம் பழகுகிறது எப்படி என்பது புரிந்தால் போதும்... அவர் முன்னுக்கு வந்துவிடலாம். அலுவலகங்களிலே மட்டும் இல்லை.. எல்லா இடங்களிலேயும் இது மிகவும் முக்கியம். வீட்டுக்குள்ளேயும் இது முக்கியம். வீட்டுக்கு வெளியேயும் இது முக்கியம்.

அடுத்தவர்களிடம் பழகுகிறது எப்படி என்பதை தெரிந்து கொள்ளாதவன் வாழ்க்கையிலே முன்னேற முடியாது. இன்றைக்கு ஆயுதங்களாலே காயப்படுத்திக் கொள்கிறவர்களை விட, வார்த்தைகளாலே காயப்படுத்திக் கொள்கிறவர்கள் தாம் அதிகம்.

பெரியவர்கள் (தலாய்லாமா) என்ன சொல்கிறார்கள் தெரியுமா? "நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டும் என்றால்,அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள். அடுத்தவருக்கு உதவி செய்ய முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால் யாரையும் புண்படுத்தி விடாதீர்கள்" என்று சொல்கிறார்கள்.

எனக்கு இந்த Inter Personal Skill மிகவும் அதிகம் சேர். சக ஊழியர்களிடம் மிகவும் சுமுகமாக நடந்து கொள்வேன்.

" என்னிடம் வேலை பார்க்கிற ஒருத்தருக்கு ஏதாவது ஒரு கஷ்டம் என்றால்... அந்தச் சமயத்திலே அவர் செய்ய வேண்டிய வேலையை நான் செய்திடுவேன் சேர் " என்பார்.

"நான் அவரிடம் சமீபத்திலே அப்படி ஏதாவது செய்திருக்கிறீர்களா? " என்று கேட்டேன்.

"செய்திருக்கின்றேன் சேர். போன வாரம் புதன் கிழமை அலுவலகத்திலே என் பக்கத்து சீட் காரருக்கு வயிற்று வலி. உடனே நான் மெடிக்கல் லீவு போட்டுட்டு எங்கள் வீட்டுக்கு போய்விட்டேன் சேர் " என்றார்.

# பொலிஸ் அதிகாரிகள் போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில்

# போதைப் பொருள் கடத்தல் மன்னன் "பொடி லெசி"

## ஜெனரல் திலீப பீரிஸ் அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

**பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள்களைக் கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளின் பின்னணியில் தெற்கின் பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான 'பொடி லெசி' என்பவரின் நெருங்கிய சகாவான, தற்போது டுபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் உதார சம்பத் என்பவர் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

இவ்விடயத்தை அரசின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவுக்கு அறிவித்தார்.

இந்த விவகாரத்தில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும், போதைப் பொருட்களை எங்கு யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது டுபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் உதார சம்பத் என்பவரே உத்தரவுகளை வழங்கியுள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் போதைப் பொருள் விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே அவர் இவ்விடயத்தை வெளிப்படுத்தினார்.

இந்த விவகாரத்தில் இது வரை 23 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 10 பேர் தொடர்ந்தும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் ஏனைய 13 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ளனர்.

போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இடம் பெற்றிருந்தது.

இதன்போது சந்தேக நபர்கள் அனைவரும் கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாக அங்குனுகொலபலஸ்ஸ சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களத்தினால் நீதிமன்றிற்கு அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, முறைப்பாட்டாளர்கள் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், அரச சட்டத்தரணி நுவன் ஆட்டிகல, அரச சட்டத்தரணி கசுன் சரச்சந்திர, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் லமாஹேவா, பிரதான பொலிஸ் பரிசோதகர் லலித் தசநாயக்க, பொலிஸ் பரிசோதகர் விஜே சூரிய, பொலிஸ் பரிசோதகர் உபாலி பண்டார ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி அஜித் பத்திரண, சட்டத்தரணி வசந்த பிட்டிகல, சட்டத்தரணி டம்பிக்க ரத்நாயக்க ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது மேலதிக விசாரணைகள் தொடர்பில் வெளிப்படுத்திய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்,

இந்தப் போதைப் பொருள் கடத்தல் விவகாரம் அல்லது விற்பனை விவகாரம் மினுவாங்கொடை பொலிஸாரால் டைல் சமிந்த எனும் கடத்தல்காரர் கைது செய்யப்பட்டதை அடுத்தே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.


இது குறித்த மேலதிக விசாரணைகளில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி மாத்தறை பகுதிக்குச் சென்று 130 கிலோ ஹெரோயினை கொழும்புக்கு எடுத்து வந்துள்ளனர். அதில் 90 கிலோவை டைல் சமிந்தவுக்கு வழங்கியுள்ளனர்.

மாத்தறையில் இருந்து கொழும்புக்குப் போதைப் பொருளினைக் கடத்திவர அரச வாகனம் ஒன்றும் சில வாகனங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஹிக்கடுவைப் பகுதியில் போக்குவரத்து வசதிகளை செய்தமைக்காக ஒருவருக்கு 130 இலட்சம் ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாம் கடந்த வாரம் மெனிக் என அறியப்படும் ஒருவரையும் அவரது சாரதியாகச் செயற்பட்ட காவிந்த சூரிய ஆரச்சி என்பவரையும் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்து விசாரித்து வருகின்றோம். அவர்கள் ஊடாக சுயாதீன சாட்சிகள் பல வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மாத்தறையில் இருந்து கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி சந்தேக நபர்கள் அதிவேக வீதி ஊடாக பாதுகாப்புடன் போதைப் பொருளினை ஹிக்கடுவைக்குக் கொண்டு வந்துள்ளதுடன் அங்கு 25 கிலோவை மூவருக்கு பகிர்ந்துள்ளமை தொடர்பில் சாட்சிகள் உள்ளன.

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'பொடி லெசி' என்பவரின் சகாவான, தற்போது டுபாயிலிருந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் உதார சம்பத் என்பவரே இந்த விவகாரத்தின் பின்னணியில் உள்ளார். அவரே போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளை வழி நடத்தியுள்ளார்" எனத் தெரிவித்தார். (ஜ-4)

## சம்பிக்கவுக்கு முன்பிணை



(கொழும்பு)

விபத்து சம்பவம் தொடர்பாக வழக்கு விசாரணையொன்றில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் முன்பிணை வழங்கியுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்து தொடர்பாக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கு இன்று வியாழக்கிழமை பரிசீலிக்கப்படவிருந்தது.

ஆனாலும் இன்று நடைபெறவுள்ள ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் தொடக்க அமர்வு காரணமாக, சம்பிக்க ரணவக்க பிரேரணையை தாக்கல் செய்து நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகினார்.

இதன்போது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க அவருக்கு முன் பிணை வழங்கியதுடன், வழக்குத் தொடர்பான விசாரணையை எதிர்வரும் 28 ஆம் திகதி பரிசீலிக்கப்படும் என உத்தரவிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவருக்கு காயம் ஏற்படுத்தியதாகவே சம்பிக்க ரணவக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இரு வீடுகளில் திடீர் தீப்பரவல்





(காத்தான்குடி)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குடா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக இரு வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த இரு வீடுகளில் பரவிய தீயை மட்டக்களப்பு மாநகர சந்தைக்குச் சொந்தமான தீயணைப்பு படையினரின் உதவியுடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

அத்தோடு, குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள மற்றொரு வீடு இனந்தெரியாத நபர்களினால் அடித்து நொருக்கப்பட்டு, வீடு முழுமையாக நாசமாகியுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)

## 421 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார் மற்றும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 421 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே.-648 என்ற விமானத்தின் மூலமாக 17 இலங்கையர்கள் அதிகாலை 1.30 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேநேரம் கட்டாரிலிருந்து கட்டார் ஏயார் வேஸ் விமான சேவை க்கு சொந்தமான QR-668 என்ற விமானத்தில் 394 இலங்கையர்கள் அதிகாலை 1.50 மணிக்கு பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் சுமார் 210 பேர் பல்வேறு விமான சேவைகளில் பணியாற்றும் விமானக் குழு உறுப்பினர்கள் ஆவார்கள்.

மேலும் லண்டன், ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து இலங்கை ஏயர்லைன்ஸ் விமானம் சேவையின் யு.எல் -504 மூலமாக 10 இலங்கை யர்களும் பண்டாரநாயக்க விமான நிலையத்தை அதிகாலை 5.10 மணியளவில் வந்தடைந்தனர்.

விமான நிலைய த்தை வந்தடைந்த அனைத்து பயணிகளையும் பி.சி.ஆர்.சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது. (ஜ-4)

# பௌத்த தேசியவாதத்தை பாதுகாக்க பாராளுமன்றம் செல்லத் தேவையில்லை


## சமாளிக்கும் அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

**பௌத்த தேசியவாதத்தை பாதுகாக்கவும், கட்டியெழுப்பவும் பாராளுமன்றம் செல்ல வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. நான் கடத்தப்பட்டதாகவும் தலைமறைவாகியுள்ளதாகவும் பிரதான ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது. தேசியப் பட்டியல் ரீதியில் எழுந்துள்ள பிரச்சினைக்கு சட்ட ரீதியில் முரண்பாடற்ற தீர்வைப் பெற்றுக் கொள்வேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபேஜன பலவேகய கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பில் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. இல்லாத பிரச்சினைகளை பிரதான ஊடகங்கள் பெரிதுபடுத்தி தங்களைப் பிரபல்யப்படுத்திக் கொண்டார்கள். தேசியப் பட்டியல் முரண்பாட்டினால் நான் தலைமறைவாகி விட்டதாகவும், கடத்தப்பட்டதாகவும் போலியான செய்திகளை வெளியிடுவதை முதலில் இந்த பிரதான ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.



பௌத்த தேசியவாதத்தை பாதுகாக்கவும் கட்டியெழுப்பவும் பாராளுமன்றம் செல்ல வேண்டிய தேவை கிடையாது. பல்வேறு எதிர்பார்ப்புக்கு மத்தியில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டோம். 67 ஆயிரம் மக்களின் ஆதரவினால் ஒரு தேசியப் பட்டியல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனாலேயே தற்போது முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

அபேஜனபல வேகய அமைப்பில் கூட்டணி அமைத்தே தேர்தலில் போட்டியிட்டோம். கூட்டணியின் பொதுச்செயலாளராக நான் செயற்படுகிறேன் ஆகவே தவறான தரப்பினர் தேசியப் பட்டியல் ஆசனத்தை கைப்பற்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது. சட்ட வழிமுறை ஊடாக பிரச்சினைகளுக்கு முரண்பாடற்ற விதத்தில் தீர்வை பெற்றுக்கொள்வேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

---

## சுமத்ரா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் தெற்கு சுமாத்ராவில் நேற்று 6.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் (ஈ.எம்.எஸ்.சி) தெரிவித்துள்ளது.

10 கி.மீ. (6.21 மைல்) ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக ஈ.எம்.எஸ்.சி. மற்றும் அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் (யு.எஸ்.ஜி.எஸ்) தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இந்நிலையில் இந்த நிலநடுக்கம் தொடர்பில் அறிக்கையில் வெளியிட்டுள்ள இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம், ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் காரணமாக இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனக் கூறியுள்ளது. (ஜ-4)

---




**கஸ்தூரி**



பெண் உயிரோட்டம் உள்ள அழகான ஓவியம். பெரும்பாலும் அதன் அருமை தெரியாதவர்களிடமே சிக்கிக் கொண்டு சிதைக்கப்படுகிறது!

**தரண்**

டாக்டர்: காலையிலே என்னம்மா சாப்பிட்டாய்?
பெண்: பர்க்கர், பீசா, சான்ட்வெஜ் சாப்பிட்டேன்...
டாக்டர்: இங்க பாருமா இது வட்சப்போ பேஸ்புக்கோ இல்லை... ஹொஸ்பிட்டல் உண்மையே சொல்லு...
பெண்: பழைய சோறும் கருவாட்டு குழம்பும் சேர்...



**பத்மசூரியன்**


மௌனமும் சிரிப்பும் மிகவும் சக்தி வாய்ந்தவைகள்...



மௌனம் நிறைய பிரச்சினைகளை குறைத்திடும் சிரிப்பு நிறைய பிரச்சினைகளைத் தீர்த்து விடும்!

**ஜெனிற்றா**

பேச ஆரம்பிக்கும் போது பேசு பேசு பேசிக்காட்டுனு உசுற வாங்க வேண்டியது



நல்ல பேச்சு வந்ததும் லொடலொடன்னு பேசாத வாய மூடுனு சொல்றது. என்ன பாத்தா எப்படி இருக்கு எல்லார்க்கும்?

**ராஜி**

மனைவி:-எங்கிட்ட உங்களுக்கு பிடிச்சது என்ன? அழகான முகமா! அன்பான மனமா! பணிவான குணமா?



கணவன்:- உன்னோட இந்த காமடி தான் டீ

**குருபரன்**

நானும் அரைமணி நேரமாக காந்தத்தை வைத்து try பண்ணுறேன்... முடியலை



பேரீச்சம்பழத்தில் இரும்புச்சத்து இருக்குன்னு சொன்னவன் இன்னைக்கு செத்தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2020 - 16.09.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**சா**ர்வரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசியை குருபகவான் வக்கிர இயக்கத்தோடு பார்க்கின்றார். சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால், குரு-சுக்கிர பார்வையின் விளைவாக முன்னேற்றம் அதிகரிக்கும். திடீர் வரவுகள் வந்து சேரும்.

### உச்ச புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் புதன், ஓகஸ்ட் 29 ஆம் திகதி கன்னி இராசியில் உச்சம் பெறப்போகின்றார். இராசிநாதன் பலம் பெற்றிருந்தால் தொட்ட காரியம் துலங்கும் என்பார்கள். வெற்றிக்கு உரிய செய்திகள் வீடு தேடிவரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பெற்றோர்களின் ஆதரவும் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.

### கடக சுக்கிரனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசிக்குச் சுக்கிரன் வருகின்றார். பஞ்சம விரயாதிபதியான சுக்கிரன் 2 இல் வரும்பொழுது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து எடுத்த முடிவுகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். பெண் வழிப்பிரச்சினைகள் அகலும்.

### ராகு-கேது பெயர்ச்சிக்காலம்

இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேதுவும் மாற்றம் பெறுகிறார்கள். செப்டெம்பர் முதல் திகதி ரிஷபத்திற்கு ராகுவும், விருச்சிகத்திற்கு கேதுவும் வருகின்றார்கள். இதுவரை உங்கள் இராசியிலேயே இருந்த ராகு மன நிம்மதி குறைவும், ஆரோக்கியப் பாதிப்பும், காரியத் தடைகளையும் கொடுத்திருக்கலாம். இனி அந்த நிலை மாறும். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்த கேது 6 ஆம் இடத்திற்கு வருவதால் உத்தியோக முன்னேற்றம் உண்டு. வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வரலாம்.

### குருவின் வக்கிர நிவர்த்தி காலம்

குரு பகவான் செப்டெம்பர் 9 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிந்து முழுமையான பலனைக் காணப் போகின்றீர்கள்.

அதுமட்டுமல்லாமல் குருவின்




பார்வை 3, 12 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே சகோதர உறவு மேம்படும். இடமாற்றங்கள் இனிமை தரும்.

வெளிநாட்டில் வசிக்கும் உறவினர் மூலம் அனுகூலமான தகவல் கிடைக்கும். உடன் பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுபகாரியங்களை முன் னின்று நடத்துவீர்கள்.

### சனியின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 14 ஆம் திகதி சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். கண்டகச்சனி பலம் பெறும் இந்த நேரத்தில் கொஞ்சம் கவனம் தேவை. சில காரியங்கள் எளிதில் முடிந்துவிடும். இழப்புகளைத் தவிர்க்க எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. உடன் இருப்பவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருங்கள். இம்மாதம் ஏகாதசி விரதமிருந்து பெருமாளை வழிபடுவது பலன்தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொடக்கத்தில் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். சனியின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு சஞ்சலங்கள் அதிகரிக்கும். எதையும் யோசித்துச் செய்வது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் சக பணியாளர்களால் தொல்லை உண்டு. விநாயகர் சதுர்த்தி அன்று விநாயகப் பெருமானை வழிபடுவது நன்மை தரும்.

## வெற்றிக்கு உரிய செய்திகள் வீடு தேடி வரும்!



**சா**ர்வரி வருடம் ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் உங்கள் இராசியிலேயே வீற்றிருக்கின்றார். தனாதிபதி சூரியன் தனஸ்தானத்திலேயே வீற்றிருக்கின்றார். விரயஸ்தானத்தில் லாபாதிபதி சுக்கிரன் ராகுவோடு கூடியிருக்கின்றார். எனவே வரவும், செலவும் சமமாகலாம். ஒருசில வாய்ப்புகள் வந்து அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாமல் போகலாம்.

### உச்ச புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 29 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகின்றார். சகாயஸ்தானாதிபதியான புதன் உச்சம் பெறுவது நன்மை தான். மாமன், மைத்துனர் வழியில் ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு எதிர்கால நலன் குறித்து முடிவெடுப்பீர்கள்.

### கடக சுக்கிரனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு வரும் சுக்கிரனால் சில நன்மைகளும் உண்டு. சுகாதிபதியான சுக்கிரன் இராசிக்கு வரும் பொழுது தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கூட்டாளிகள் உதவியாக இருப்பர். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

### ராகு-கேதுக்களின் பெயர்ச்சிக் காலம்

செப்டெம்பர் முதல் திகதி ராகு-கேது பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. ரிஷபத்திற்கு ராகுவும், விருச்சிகத்திற்கு கேதுவும் வருகின்றார்கள். லாப ஸ்தான ராகுவால் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரும். ஊதிய உயர்வும் கிடைக்கலாம். பஞ்சம கேதுவின் ஆதிக்கத்தால் பிள்ளைகள் வழியில் தொல்லைகள் உண்டு. பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கும்.

### குருவின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 9 ஆம் திகதி தனுசு இராசியில் குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். எனவே குடும்பத்தில்




வாக்குவாதங்கள் வந்து விலகும். பிள்ளைகளாலும், குடும்பப் பெரியவர்களாலும் கொஞ்சம் கவலைப்பட நேரிடும். அலுவலகப் பணிகளை துரிதமாகச் செய்வதோடு அனைத்தையும் உங்கள் நேரடிப் பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

### சனியின் வக்கிர நிவர்த்தி காலம்

செப்டெம்பர் 14 ஆம் திகதி சனி, தனுசு இராசியில் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி ஆறாமிடத்தில் பலம்பெறும் இந்த நேரம் 'விபரீத ராஜயோகம்' செயற்படும்.

எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். குடும்பப் பிரச்சினை இனி நல்ல முடிவிற்கு வரும். இம்மாதம் பௌர்ணமி விரதமிருந்து இல்லத்துப் பூஜை அறையில் சிவபுராணம் படித்து வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பச்சுமை கொஞ்சம் கூடுதலாக இருக்கும். பணப் புழக்கம் நன்றாகவே இருந்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். மாதத்தின் பிற்பகுதியில் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு தொகையை செலவிட நேரிடும். கணவன்-மனைவி உறவு திருப்தி தரும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறை காட்டுவீர்கள். விநாயகர் கவசம் பாடி சதுர்த்தி நாளில் விநாயகரை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

## தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்!

# மஞ்சள் இறக்குமதிக்கு அனுமதி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)
அடுத்த ஒன்றரை ஆண்டு களுக்கு மஞ்சளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கரும்பு, சோளம், மரமுந்தி ரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவைசார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மஞ் சள் பற்றாக்குறை காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுடன் கலந்தாலோசித்து இதற்கான திட்டம் தயாரிக்கப் படும் என்றும் அவர் தெரிவித் தார்.

இந்தியாவில் இருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக கடத் தப்படும் மஞ்சள்களை இலங் கைக் கடற்படையினர் பறி முதல் செய்யும் சம்பவங்களும் அண்மைக் காலங்களில்



அதிகளவில் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.(ஜ-4)



# ஆன்மீகம்

## உனக்கு நீதான் நீதிபதி

(நேற்றைய தொடர்ச்சி)
அன்பரே! என் தந்தையார் இறந்து பல வருடங்கள் உருண்டோடி விட்டபிறகும் அவர் தயாரிப்பான ஷூ உங்கள் காலில் இருக்கிறது என்றால் என்ன பொருள்? தரமான தயாரிப்பு அது. உருவாக்கியவர் ஒரு உன்னதமான தொழிலாளி என்று தானே அர்த்தம். அப்படிப்பட்டவர் மகன் நான் என்பதில் எனக்கு அளவில் லாத ஆனந்தம்.

மேலும் ஒன்று தங்கள் ஷூ பழுதாகி விட்டால் என்னிடம் தாருங்கள். சரி செய்து தருகிறேன். எனக்கு பாதரட்சை செய்யவும் தெரியும். பார் ஆளவும் தெரி யும். இரண்டையும் பாராட்டும் வண் ணம் செய்யவும் தெரியும் என்றார். விமர்சித்தவர் தலை விழுந்தது விழுந்தது தான்.

வளர்ச்சியை விரும்பும் நண்பர்கள், நம் பெற்றோர்கள், அனுபவம் வாய்ந்த முதியோர்கள் நம் செயல்களை விமர்சித் தால் அதிலுள்ள நுட்பத்தை காது கொடுத் துக் கேட்டு கவனமாக நம் செயல்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டியது நம் கடமை.

எல்லோர் அபிப்பிராயத்தையும் கேட் டால் என்ன ஆகும் என்பதைக் கீழ்க்க ண்ட கதை நகைச்சுவை துலங்க விபரிக் கின்றது. ஒரு பெரியவர் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தார். அப்போது எதிர்வீட்டுப் பெரியவர் அங்கு வந்து மேற்கே நம் ஊர் குலதெய்வக் கோயில் உள்ளதே! மேலும் துவாரகாபுரி புண்ணி யத் தலமும் மேற்கில்தான் உள்ளது. அப்பக்கம் காலை நீட்டாமல் திரும்பிப் படுங்கள் என்றார்.

பெரியவர் கிழக்கில் காலை நீட்ட 'ஜெகன்னாதபுரி அப்பக்கம் இருக்கிறது' என்றார் வந்து சேர்ந்த இன்னொருவர். அப்போது வடக்கில் தலை வைத்துப் படுக்கிறேன் என்ற முதியவரிடம் வடக் குப் பக்கம் தலை வைத்து உறங்கக் கூடாது என்கிற சாஸ்திரம் உங்களுக்குத் தெரியாதா என்றாள் அங்கு வந்த அவரின் மனைவி.

ஊரார் விமர்சனத்தால் பெரியவர்க்கு உறக்கம் கெட்டதுதான் மிச்சம். கவியர சர் கண்ணதாசன் ஒருமுறை கல்லூரி ஒன்றின் ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு கவிதை வாசித்தார். ஒரே கைதட்டல்! பாராட்டு! ஒவ்வொரு வார்த்தைகளும் வைரங்கள். உங்கள் கவிதை அற்புதம் எனப் பலரும் விமர்ச னம் செய்து பாராட்டினர்.

கண்ணதாசனுக்கு முன்னர் ஒரு மாண வனும் கவிதை படித்தான். ஆனால், அவன் கவிதையை யாரும் ரசிக்க வில்லை. அவையினர் முன்னே பின்னர் தான் கண்ணதாசன் ஒரு ரகசியத்தை அவிழ்த்தார்.

விழாவில் கலந்துகொள்ள வரும் போது எனக்கு முன் கவி படித்த மாண வனிடம் என் கவிதையைக் கொடுத்து விட்டு அவன் எழுதிய கவிதையை நான் வாங்கிக் கொண்டேன். நான் அரங்கேற் றியது அவனுடைய கவிதையைத்தான்! அவன் படித்தது என் கவிதை.

ஊர் யார் வாயிலிருந்து வருகிறது என்று பார்த்துத் தான் விமர்சனம் செய்கிறது. உள்ளடக்கத்தைப் பார்ப்ப தில்லை என்றார். விமர்சனங்களால் நாம் குழம்பிப் போய்விடக்கூடாது என் பதை எடுத்துக் காட்டுகிறதல்லவா இந்தச் சம்பவம்.

நன்னிலைக்கண் தன்னை நிறுப் பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழ் இடுவானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான் என்கி றது நீதி வெண்பா!

நமக்கு நாமே நீதிபதியாகி - நடு முள் நடுங்காத நல்ல தராசாக மாறி நம்மைச் சுயவிமர்சனம் செய்து கொண்டு செய லில் இறங்கினால் ஊர் விமர்சனங்கள் எல்லாம் காற்றில்தான் கலக்குமே தவிர நம் காதுகளில் நுழையாது.

# செய்தித்துளிகள்

## ஒரேநாளில் அதிகளவான பி.சி.ஆர். பரிசோதனை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றினை கண்டறிய மேற்கொள் ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை நேற்று முன்தினம் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 3 ஆயிரத்து 518 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை நாட்டில் ஒரு நாளில் ஆகக்கூடியதாக 3 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனையை தாண்டியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நாட்டில் இதுவரை ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 25பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-4)

## சுற்றிவளைப்பில் 392 பேர் கைது

(கொழும்பு)
மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 392 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை 5 மணிவரையான காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.அத்துருகிரிய பகுதியில் ஒரு கிலோ 416 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உள்ளிட்ட 188 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

## கேரளக் கஞ்சாவுடன் 4 பேர் கைது

(கொழும்பு)
நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி நகரப் பகுதியில் கேரளக் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நான்கு சந்தேக நபர்களை நாவலப்பிட்டி குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த கைது சம்பவமானது நேற்று முன்தினம் மாலையில் இடம்பெற்றது.

நாவலப்பிட்டி குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதோடு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு தொகை கஞ்சாவும் 34 ஆயிரத்து 500 ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 115 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 250 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 110 | 80 |
| கோவா | 120 | 150 | 120 | 160 |
| கரட் | 140 | 140 | 160 | 140 |
| பூசணி | 80 | 70 | 70 | 100 |
| புடோல் | 80 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 130 | 90 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 240 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 120 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 100 |
| லீக்ஸ் | 60 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 250 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 150 | 250 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 55 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| சரப்பலா | 60 | 50 | 50 | 60 |



# சிறுவர் அரங்கம்

## தென்னை மரம்

அரசர் கிருஷ்ண தேவ ராயரின் அவைக்கு ஒரு நபர் வந்தார். அவர் அரசரிடம், "அரசே என்னுடைய வயலும் பக்கத்து வீட்டுக்காரர் வயலும் அருகருகில் உள்ளன.

இரண்டுக்கும் இடையில் உள்ள வரப்பில், ஒரு தென்னை மரம் உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் அதை எனக்கு விற்று விட்டார். நான்தான் அதை நன்றாகப் பராமரித்து வருகிறேன்.

இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக்கூடாது என்றார். இப்போது அவர் தன் முடிவை மாற்றிக் கொண்டு விட்டாராம். மரம் திரும்ப அவருக்கு வேண்டுமாம்..." என்று முறையிட்டார்.

அதைக் கேட்டு அவையினர் அனைவரும் திடுக்கிட்டனர். அமைச்சர் சொன்னார். "அந்த மனிதாபிமானம் அற்ற மனிதரைக் கைது செய்து வந்து சிறையில் அடைக்க வேண்டும்" என்றார்.

அதற்குள் சேனாதிபதி, அந்த நபரைக் கைது செய்து வரத் தயாராகி விட்டார். அப்போது அரசர் "என்ன செய்யலாம்?" என்று கேட்பதைப் போல் தெனாலிராமனைப் பார்த்தார்.

தெனாலிராமன் புரிந்து கொண்டு, "தாங்கள் அனுமதி தந்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளி வைத்துக் கொள்ளலாம்..." என்றார்.

அரசர், "சரி" என தெனாலி அந்த நபரிடம், "நாளைக்கு உன் பக்கத்து வீட்டுக்காரனையும் அழைத்து வா..." என்று அவனை அனுப்பி விட்டார். மறுநாள் அந்த நபரும், பக்கத்து வீட்டுக்காரனும் சபைக்கு வந்தனர்.

இருவரிடமும் நன்கு விசாரித்த பிறகு தெனாலிராமன் சொன்னார். "அப்படியானால் நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக்கொள்ள விரும்புகிறாய் இல்லையா?" என்றார்.

அதற்கு அவன், "ஆம் ஐயா" என்றான். "சரி, நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடு..." என்றார் தெனாலிராமன்.

அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டான். சபையினருக்கு ஒன்றும் புரியவில்லை. "தெனாலி ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்?" என்று திகைத்தார்.



பிறகு தெனாலி, மரத்தை வாங்கியவரிடம், "சரி... இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை..." என்றார். அந்த மனிதரிடம் ஏமாற்றம்.

அப்போது தெனாலிராமன் தொடர்ந்து, "இன்னொரு விடயம்... அந்த மரம் நீ வாங்கும்போது எப்படி இருந்ததோ அப்படியே அதை நீ திரும்பக் கொடுத்து விட வேண்டும்..." என்று கூறி விளக்கினார்.

"அதாவது நீ மரத்தை அவரிடம் வாங்கும்போது அம்மரம் காய்க்கத் தொடங்கவில்லை. ஆகவே, அதைத் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்பு எல்லாக் காய்களையும் பறித்துக்கொண்டு விடு..." என்றார் வாங்கியவரிடம்.

திரும்பப் பெற்றவரிடம், "காய் இல்லாத மரத்தைத்தானே நீ விற்றாய்...? ஆகவே, என்றைக்கும் காயில்லாத மரம் தான் உன்னுடையது.

அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்தவரையே சேரும்.

அதை அவர் பறித்துக் கொள்ள அவ்வப்போது நீ அனுமதிக்க வேண்டும் தடுக்கக்கூடாது. நீயும் பறித்துக் கொள்ளக் கூடாது..." என்றார்.

தெனாலியின் இத்தீர்ப்பை அரசர் ஆமோதித்தார். திரும்பப் பெற்றவன் முகத்தில் ஏமாற்றம். புகார் கொடுத்த நபர் மகிழ்ச்சியுடன் எல்லாரையும் குறிப்பாக, தெனாலிராமனை வணங்கி விட்டு விடைபெற்று சென்றார்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## சோழவளநாடு சோறுடைத்து...

42

சோழர்கால ஆபரணங்கள்




நிலவரிதான் முதன்மையானது. இதை மக்கள் பணமாகவும் நெல்லாகவும் கட்டினார்கள். இது தவிர, சுங்கவரி, தொழில் வரிகள் என்று நானூறுக்கும் அதிகமான வரிகள் இருந்தன.

காடுகள், கனிப் பொருட்கள், உப்பளங்கள் ஆகிய இயற்கை வளங்களைப் பயன்படுத்துவோர் மீதும் வரி விதிக்கப்பட்டது. வரி கட்டாதவர்கள் தண்டம் என்கிற அபராதத் தொகையைக் கட்ட வேண்டிய சட்டமும் இருந்தது.

போர்வரி என்ற ஒரு தனி வரியும் சோழர் காலக்கட்டத்தில் உண்டு. போரினால் ஏற்படுகிற செலவீனங்களை ஈடுகட்ட மக்கள் போர் வரி செலுத்த வேண்டிய கட்டாயமும் இருந்தது.

ஒரு வேலி நிலத்துக்கு ஒரு பொன் என்கிற ரீதியில் போர் வரிகள் இருந்தன.

வரியை வசூலிக்கும் பொறுப்பு ஊராட்சித் துறைக்கு இருந்தது. அரசருக்கு நேரடியாகக் கட்டப்படுகிற வரி தனி. மேலும் ஊர் சபைக்கும் நகர சபைக்கும் தனித்தனி வரிகள் இருந்தன.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வரி கட்டாதவர்களின் நிலத்தைக் கிராமசபை தன் அதிகாரத்துக்குள் கொண்டுவந்து விடும்.

வரிவசூலுக்குக் கிராம சபைகள் முழுப்பொறுப்பேற்றன. கட்டாய வரி என்பது மட்டுமல்லாமல் பலவிதங்களில் வரி விலக்கும் உண்டு.

ஆனால் சாதாரண மக்களுக்கு அதனால் பெரிய பலனில்லாமல் இருந்தது. சோழப் பேரரசின் எல்லைகள் விரிவடைந்த போது செலவுகள் அதிகமாகின.

முக்கியமாக இராணுவ நடவடிக்கைக்கான செலவுகள் நிதியாதாரத்தை அழித்தன. இதனால் வரிவசூல் கடுமையாக்கப்பட்டது.

பெரும் பணம் சேர்கிற இடத்தில் ஊழலுக்கும் இடமிருக்கும். சில கரும் புள்ளிகளால் சோழ அரசிற்கும் மக்களுக்கும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

பல இராணுவத் தளபதிகள் தன்னிச்சையாக வரிவசூல் செய்துள்ளார்கள். அரசு நிர்வாகம் இராணுவ நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் செயற்பட்டதால் மக்கள் நிர்வாகத்தில் சில ஓட்டைகள் ஏற்பட்டன. கிராமசபை நடைபெறும் போது அரச ஊழியர்களுக்கும் மக்களுக்கும் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் களைபவர்களாக நடுநிலையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

ராஜராஜனின் வருமானமும் அவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதியும் அவர்களுக்குண்டான செலவுகளுமே அதிகமாக இருந்தன. ராஜராஜனின் செலவு என்று தனியாக இருந்தது.

ராஜராஜன் கழுத்தில் கெம்பு, பச்சை, கோமேதகம் போன்ற நவரத்தினக் கற்களை ஆபரணமாக அணிந்தார். விலையுயர்ந்த கற்கள் பொருந்திய தங்கக் காதணிகளை அணிந்தார்.

அமைச்சர்களும் சேனாதிபதிகளும் முத்துமாலைகள் அணிந்தார்கள். அரச வம்சத்தினருக்கு அயல் நாடுகளிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

வாசனைத் திரவியங்கள் சுமாத்ரா தீவுகளிலிருந்து வந்தன.

(தொடரும்)

அனுபவித்து அனுபவித்து புத்தி பெற அறுபது ஆண்டுகள் வேண்டும். அனுபவித்தவர்களிடம் புத்தி பெற அரை நாள் போதும். – *கி.ஆ.பெ.விசுவநாதம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட 9ஆவது பாராளுமன்ற அமர்வு

இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றம் இன்று கூடுகின்றது.

கொரோனாத் தொற்று அபாயம் இருக்கக்கூடிய வேளையில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு பாராளுமன்றம் கூடுவது என்ற விடயம் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

இதை நாம் கூறும்போது, இஃது மட்டும் தான் வரலாற்றுப் பதிவா? என்றால் இல்லை.

இந்த நாட்டின் சுதந்திர காலத்தில் ஆட்சிப் பீடமேறிய ஐக்கிய தேசியக் கட்சி முற்று முழுதாகத் தோல்வியடைந்து கிடைத்த ஒரேயொரு நியமன உறுப்பினரையும் இதுவரை நியமிக்க முடியாத நிலையில்,

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இல்லாத பாராளுமன்றம் இன்று கூடுவது பதிவிற்குரியதாகும்.

இதற்கு மேலாக, நம் தமிழர் தரப்பைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பாராளுமன்றம் போக முடியாத நிலைமையும் எங்களைப் பொறுத்தவரை பதிவிற்குரியது.

இவையாவற்றுக்கும் மேலாக, வடக்கு மாகாண சபையில் முதலமைச்சராக இருந்து இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் முதற் தடவையாக பாராளுமன்றம் செல்வதும் நாம் குறித்துரைக்கக்கூடிய பதிவே.

இதில், இந்த நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த ஒருவர் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் செல்கின்ற ஒரு புதிய பரிமாணத்தை நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் பாராளுமன்றப் பிரவேசம் பதிவேற்றம் செய்துள்ளது.

இவைமட்டுமே ஒன்பதாவது பாராளுமன்றக் கூட்டத் தொடரின் வரலாற்றுப் பதிவுகள் என்றால்,

இவற்றையும் கடந்து; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள், பிள்ளைகள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என்ற பதவி நிலைகளில் இருப்பதும் இவ்வாறானதொரு அரசியல் சூழமைவு எதிர்காலத்தில் ஏற்படுவது சாத்தியமற்றது எனக் கூறக்கூடிய அளவில், 9ஆவது பாராளுமன்றக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இன்று கூடுகின்ற ஒன்பதாவது பாராளுமன்றத்தில் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக ஒற்றுமைப்பட்டு தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை மட்டுமே நாம் இங்கு முன்வைக்க முடியும்.

எதுவாயினும் இலங்கைப் பாராளுமன்றத்தில் வயது கூடிய பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை 87 வயதான கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்குரியதாகிறது என்பதை தமிழ் மக்கள் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

# சர்வதேச தரத்திற்கு அமைய இலங்கையில் பாடத்திட்டம்

## கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா

(கொழும்பு)

சர்வதேச தரத்திற்கு அமைய இலங்கையில் புதிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய முதலாம் தரத்தில் இருந்து 13 ஆம் தரம் வரை பாடத்திட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர்ஜீஎல்பீரிஸின் ஆலோசனைக்கு அமைய .இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.நாட்டின் பொருளாதார முறைமை ,தொழில் சந்தை ஆகியவற்றை உள்ளடக்கியதாக புதிய பாடத் திட்டம் தயாரிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பிலான கருத்துக்கள் மற்றும் யோசனைகளை மாவட்ட ரீதியாகப் கல்வித்துறை சார் வல்லுநர்கள், மாணவர்கள்.வர்த்தகப் பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டார்.

மேலும் புதிய பாடத்திட்டத்தை அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளதாகவும் கபில பெரேரா தெரிவித்தார்.

புதிய பாடத்திட்டத்தின் மூலம் தற்போதைய கல்வி முறையூடாக மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்க முடியும்என நம்பப்படுகிறது (ம-3)

### 9 ஆவது பாராளுமன்றத்தின்

## புதிய சபாநாயகராக மகிந்த யாப்பா குழுக்களின் பிரதித்தலைவராக அங்கஜன்

(கொழும்பு)

இலங்கையின் 09 ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு தனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற குழு கூட்டத்தின் போது தனது பெயர் முன்மொழியப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பிரதி சபாநாயகர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலப்பிட்டியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், குழுக்களின் பிரதித்தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் மகிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 09 வது பாராளுமன்றத்தின் தொடக்க அமர்வு இன்று நடைபெறுகிறது. இதன் போது சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கொவிட்-19 தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வகுப்புக்கள்யாவும்நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகக்கவசம் அணிந்து வழமையான வகுப்புக்களுக்கு சமுகமளிக்குமாறு தகவல் தொழில்நுட்ப பூங்கா நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (5)

### கொடிகாமம்–இராமாவில் பகுதியில்

## 3 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

கொடிகாமம்-இராமாவில் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறுக்கு வீதி ஒன்றினுள் இருந்து கள்ள மணலுடன் உழவியந்திரம் ஒன்று திடீரென ஏ9 வீதிக்கு ஏறிய போது ஏ9 வீதியால் பயணித்த மிதிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றின் வாகனத்துடன் மோதியுள்ளது. இந்நிலையில் குறித்த வாகனத்தின் பின்னால் வந்த பிக்கெப் வாகனம் மிதிவெடி அகற்றும் நிறுவன வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ் விபத்துச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3, 30)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மௌனத்தின் பலன் பிரார்த்தனை; பிரார்த்தனையின் பலன் நம்பிக்கை; நம்பிக்கையின் பலன் அன்பு; அன்பின் பலன் சேவை; சேவையின் பலன் ஆன்ம நிம்மதி. -அன்னை தெரேசா**

## சத்திய தரிசனம்

## நேரம் நல்ல நேரம்



❖ குடும்பம் என்பது சமூகத்தின் ஒரு பகுதியே. ஆன்மீகம், ஒழுக்கம், பண்பாடு போன்ற நற்பண்புகள் குடும்பத்தில் இருந்தால் சமூகத்திலும் பிரதிபலிக்கும்.

❖ எந்த விடயத்திலும் மாறுபாடான சிந்தனை இருப்பதை தவிர்க்க முடியாது. அதுபோல, கடவுள் விடயத்திலும் நாத்திகம் பேசும் மனிதர்கள் இருக்கின்றனர்.

❖ அழுக்குத் துணிகளை நல்ல துணிகளோடு சேர்த்து வைப்பதில்லை. அதுபோல, தீயவர்களோடு நல்லவர்கள் சேர விரும்புவதில்லை.

❖ நாவை அடக்கப் பழகினால் ஞானியாகலாம். எளிய உணவு, அளவான பேச்சு இரண்டையும் கடைபிடித்தால் எல்லா நலங்களும் கைகூடும்.

❖ அன்பு, அமைதி, உண்மை, சேவை இவையே தியானத்தின் அடையாளங்கள். பேச்சில் மட்டுமல்ல, செயலிலும் வெளிப்படுத்துங்கள்.

❖ காலத்திற்கு மனிதன் கட்டுப்பட்டே ஆக வேண்டும். நேர ஒழுங்கு மிகவும் முக்கியம். குறித்தநேரத்தில் குறித்த வேலையைச் செய்து முடியுங்கள். ஒவ்வொரு விநாடியும் நல்ல நேரமாகட்டும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி, பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பம்பைமடுவிலிருந்து குருக்கள்புதுக்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வாரிக்குட்டியூர் நான்காம் வட்டாரம், நித்திய நகர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# லது- றஜீவ் இணைப்பாட்டம்
# யாழ்.சென்றல் காலிறுதிக்கு தகுதி



யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020 இன் மேற்படி தொடர் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ்.சென்றல் அணி றெயின்போ அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று காலிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.



முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் ஜெரூஸன் 68 ஓட்டங்களையும் நிதர்ஸன் 40 ஓட்டங்களையும் யதுஸன் 38 ஓட்டங்களையும் கிருபா 33 ஓட்டங்களையும் செந்தூரன், டனுஸாந் ஆகியோர் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ். சென்றல் அணியின் சலிஸ்ரன் 3 விக்கெட்டுக்களையும் நிஸான், கிரிஷாந் தலா 2 விக்கெட்டுக்களையும் சுபாதீஸ், மதுஸன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

244 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 35.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

போட்டியில் லது.றஜீவ் ஆட்டமிழக்காது முறையே 98.71 ஓட்டங்களையும் சலிஸ்ரன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

களத்தடுப்பில் றெயின்போ அணியின் கிருபா 2 விக்கெட்டையும் செந்தூரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

வெற்றி பெற்ற சென்றல் அணி காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# கௌதமனின் அதிரடி ஆட்டம்
# சென்றலைட்ஸ் அணி காலிறுதிக்கு தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். கிரிக்கெட் சம்பியன் 2020 தொடரின் இரண்டாவது சுற்றின் 10 ஆவது போட்டி கடந்த 15 ஆம் திகதி சனிக் கிழமை மகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் கௌதமனின் அதிரடி ஆட்டத்தால் சென்றலைட்ஸ் அணி ஹாட்லியைரற்ஸ் அணியை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைரற்ஸ் அணி 37.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் சாகித்தியன் 41 ஓட்டங்களையும் சேயோன் 25 ஓட்டங்களையும் மாதவன் 21 ஓட்டங்களையும் பிரசாந் 22 ஓட்டங்களையும் கிரிதரன், புருசோத்தமன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

களத்தடுப்பில் சென்றலைட்ஸ் அணியின் ஜெரிக், டார்லின், அலன்ராஜ், ஜெனோஸன் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் விதுஸன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 27.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களுடன் வெற்றி பெற்றது.

போட்டியில் கௌதமன் அதிகபட்சமாக 47 ஓட்டங்களையும் பிரியலக்ஸன் 28 ஓட்டங்களையும் நிஸான் 26 ஓட்டங்களையும் ஜெனோஸன் 19 ஓட்டங்களையும் செல்ரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

களத்தடுப்பில் பிரதீஸ் மற்றும் சாகித்தியன் 2 விக்கெட்டுக்களையும் சேயோன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



போட்டியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி 3 ஆவது காலிறுதிப் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# நொதேன் பிறீமியர் லீக் - 2K20



## மயிலிட்டியில்...

மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மயிலிட்டி வடக்குப் பகுதியிலுள்ள காணி ஒன்றை துப்புரவு செய்தபோது வெடி பொருட்கள் இருப்பது அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து பலாலிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

எனினும் நீதிமன்றத்தின் அனுமதி பெறப்படாமையால் நேற்று முன்தினம் குறித்த வெடிபொருட்கள் மீட்கப்படவில்லை.

நேற்றையதினம் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று பி.ப 4.30 மணியளவில் குறித்த வெடி பொருட்கள் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டது. (ம-3,104)

## பால்ராஜின்...

முந்துள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் வசித்து வந்த சந்திரசேகரம், நோயால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள, அவருடைய இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று, பின்னர் கொக்குத்தொடுவாய் இந்து மயானத்தில் அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டது. (ம-3.8)

## 'வெயிலுக்குள்...

ருந்த வேலையற்ற பட்டதாரிகளை, "வெயிலில் காய்ந்து கொண்டிருக்காமல் வீடுகளிற்கு செல்லுங்கள்" என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய கன்னி அமைச்சரவையில், 10 ஆயிரம் பட்டதாரிகளிற்கு நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

பின்னர், ஜனாதிபதி செயலகத்திலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி, போராட்டக்காரர்களிற்கு அருகில் வந்து வாகனத்தில் இருந்த படியே சில வார்த்தைகள் பேசினார்.

10 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்க அமைச்சரவை எடுத்த முடிவை அறிவித்த ஜனாதிபதி, "வெயிலில் காய்ந்து கொண்டிருக்காமல் வீடுகளிற்கு செல்லுங்கள்" என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

*(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## மீள முழுமையாக...

கல்வி அமைச்சு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

வகுப்பறைகளில் தேவையான வசதிகள் இருந்தால் சமூக இடைவெளியினை பேண முடியுமானதாக இருந்தால் அனைத்து பாடசாலைகளையும் திறந்து கல்வி நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

200 பேருக்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட, ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணக்கூடிய வகையில் கடந்த 10 ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், 200 பேருக்கும் அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் சுழற்சி முறையிலேயே வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கிளிநொச்சி...

பயணித்த மூவரே குறித்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

குறித்த பகுதியில் காணப்படும் வீதி வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் கிளிநொச்சி காந்தி கிராமம் பகுதியை சேர்ந்த 18 வயதான ஞானகுமாரன் கிருசாந்தன் உயிரிழந்துள்ளதுடன், கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய சர்வநாதன் பவிக்சன் படுகாயமடைந்துள்ளார்.

உயிரிழந்த மற்றைய இளைஞன் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,100,114,312)

## கிணற்றுக்குள்...

வதற்காக கிணற்றடிக்கு சென்ற மூதாட்டி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்.அச்சுவேலி பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இதில் விக்னேஸ்வரன் சிவபாக்கியம் (வயது - 77) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சாவகச்சேரி...

சேரி கச்சாய் வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி, கச்சாய் வீதிப் பகுதியில் தம்புதோட்டம் படை முகாமை அண்மித்து நேற்று புதன்கிழமை மதியம் கொள்ளையர்கள் இருவர் முகவரி கேட்டு விட்டு மூதாட்டி ஒருவரின் ஒன்றரைப் பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

வீரசிங்கம் வீதியின் ஊடாக நடந்து வந்து பஸ்ஸில் ஏறுவதற்காக சாவகச்சேரி - கச்சாய் வீதியில் குறித்த மூதாட்டி காத்திருந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மூதாட்டியிடம் முகவரி ஒன்றைக் கேட்டு விட்டு அவர் அணிந்திருந்த சங்கிலியை அபகரித்துக் கொண்டு மீசாலைப் பக்கமாக தப்பி ஓடிய தாகத் தெரிய வருகிறது.

சங்கிலியை பறிகொடுத்த மூதாட்டி பொலிஸ் நிலையம் சென்று முறையிட ஆள் உதவி இல்லாத நிலையில் பஸ்ஸில் ஏறி வீடு சென்றிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் கடந்த காலங்களிலும் வழிப்பறி மற்றும் களவு சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அதன் பின்னர் கச்சாய் வீதியில் இராணுவச் சோதனைச் சாவடி அமைந்திருந்த காலத்தில் இவ்வாறான களவுச் சம்பவங்கள் குறைந்திருந்ததாகவும் இருப்பினும் தற்போது சோதனை சாவடிகள் இல்லாத காரணத்தால் மீண்டும் வழிப்பறி, களவு ஆகியன தலைதூக்கி வருவதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்திருந்தனர். (ம-3.30)

## 9ஆவது பாராளு...

புதிய பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தை இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பார்.

அரசியலமைப்பின் பிரிவு 33 (2) இல் உள்ள விதிகளின்படி அரசின் கொள்கை அறிவிப்பை வெளியிட்டு ஜனாதிபதி உரையாற்றுவார்.

கன்னி பாராளுமன்ற அமர்வுக்கு வருகை தரும் ஜனாதிபதியை வரவேற்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

புதிய சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க ஆகியோரால் பாராளுமன்றக் கட்டடத்தின் பிரதான வாயில் படிக்கட்டுகளில் ஜனாதிபதி வரவேற்கப்படுவார்.

இருப்பினும், இன்றைய பதவியேற்பின்போது துப்பாக்கி வேட்டுக்கள் அல்லது வாகன அணிவகுப்புகள் இருக்காது.

பாராளுமன்ற சம்பிரதாய அமர்விற்கு முன்னதாக, காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடும்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தின் திறப்பு விழா சடங்கு காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை முதல் அமர்வின் போது, நிலையியல் கட்டளையின் இலக்கம் 1 இன்படி, புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்படுவார்.

பின்னர், புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபாநாயகர் முன் உறுதிமொழியை எடுப்பார்கள்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளையின்படி, தெரிவான உறுப்பினர் ஒருவர் அதிகாரப்பூர்வ மொழிகளான தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதாவதொரு மொழியில் சத்தியப்பிரமாணம் செய்யலாம்.

புதிய பாராளு மன்றத்தில் பொது ஜன பெரமுன 145 இடங்களைப் பெற்றது. 54 ஆசனங்களை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக செயற்படும்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன சபை முதல்வராகவும், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆளுங் கட்சி பிரதம கொறடாவாகவும் செயற்படுவர். (ம-3)

## 19ஐ இரத்துச்...

நேற்றைய அமர்வில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தம், 2021ஆம் ஆண்டுக்கான புதிய வரவு - செலவுத் திட்டம் ஆகிய பிரதான இரு விடயங்களுக்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

19ஆவது திருத்தத்தை மாற்றம் செய்தல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான யோசனையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவையில் முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் யோசனையை அமைச்சர்கள் ஏற்றுக் கொண்டு 19 ஆவது திருத்தத்தை இரத்து செய்து 20ஆவது திருத்தத்தை உருவாக்க ஏகமனதாக இணக்கம் தெரிவித்து அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள்.

19ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட ஜனாதிபதியின் பதவிக்காலம், ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் எத்தனை தடவை போட்டியிடலாம், மற்றும் பாராளுமன்றத்தின் அதிகாரம், பதவிகாலம், பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களின் அதிகாரம் ஆகிய விடயங்கள் குறித்து 20ஆவது திருத்தத்தில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது. (ம-3)

## 20...

குணவர்தன, சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. 24


























விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமை போல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-005)

0768226240



சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (3627)

077 331 9554


## முள்ளியவளை...

மான காணிகளை சுவீகரிக்க வன வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று குற்றம் சாட்டப்படுகிறது.

வெற்றுக் காணிகளை அளவீடு செய்ய வனவளத் திணைக்களத்தினர் எடுத்த நடவடிக்கை காணி உரிமையாளர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

சுமார் 45 பேருக்கு சொந்தமான காணிகளை எல்லைப்படுத்த வனவளத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ளனர். காணிகளுக்கான உரிமைப்பத்திரங்கள், சான்றுத் துண்டுகளை வைத்துள்ள இவர்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளில் பயன்தரு மரங்களை நட்டுப் பராமரித்து வந்துள்ளனர்.

இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் சிலருக்கு எதிராக வனவளத் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 20 ஆவது...

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் இரத்து செய்யப்பட்டு 20ஆவது திருத்தம் உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதை தொடர்ந்து சட்ட வரைபு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## அரச வங்கிகளில்...

சருமான மகிந்த ராஜபக்ஷ குழுவொன்றை நியமித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களை அடிப்படையாகக் கொண்டு அரச வங்கிகளில் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அரச வங்கிகளில் முறை கேடுகள் இடம்பெற்றதாக பலராலும் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்த அதிரடி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளராக ரொஹான் வெலிவிட்ட நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 30 - 06 - 1943

இறப்பு 06 - 08 - 2020

கடந்த ( 06.08.2020 ) வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர்

## இராஜேஸ்வரி சின்னராஜா

( தவில் மாமேதை N.R. சின்னராஜாவின் அன்பு மனைவி )

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று ( 20.08.2020 ) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு உங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம். (3630)

கோவில் வாசல், இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர் 077 628 0256, 077 519 4510



சிவப்பு மண் விற்பனைக்குண்டு

பள்ள நிலங்களைச் சீர் செய்வதற்கும் வீட்டு அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு மணல் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோருக்கு குறைந்த விலையில் தங்களுக்கு தேவையான இடத்திற்கு டிப்பர் மூலம் (4 ரக்ரர் லோட்) கொண்டு வந்து பறிக்க முடியும். (C-096)

தொடர்புகளுக்கு 077 649 1027, 077 790 6291



வேலை வாய்ப்பு

இலங்கையின் பிரதான நிதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையில் உடனடி வேலை வாய்ப்புக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (C-102)

தொடர்புகளுக்கு 076 851 8790, 077 670 7142

(வடமராட்சி பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.)



விற்பனைக்கு

இரண்டு நாம்பன் கன்று மற்றும் ஒரு கடாயும் உடன் விற்பனைக்கு.

(யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தி ) (3628)

தொடர்பு 077 203 0309, 077 673 6103



வேலையாட்கள் தேவை

மரத் தளபாடங்கள் செய்வதற்காக தச்சு வேலை அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. (3622)

தொடர்பு 077 713 0872



# 29 ஆண்டுகள் எனது ஆன்மீக போராட்டப் பாதையிலே....

## ஈசுர விநாயகரின் அருட்செய்தி !

என் இனிய நெஞ்சங்களே!

உலகம் எங்கு கேட்டாலும் கொரோனா! கொரோனா! கொரோனா! ஆம் இதற்கு ஓர் முடிவே இல்லையா? இனிமேல் இது தான் எங்கள் வாழ்க்கையா? இல்லை, இல்லை. மனிதன் தன்னால் முடியும் என்றால் இறைவன் எதற்கு? மனித சக்தியை ஆட்டிப்படைப்பது தெய்வீக சக்தி. ஆம், அதனால் இது ஒரு தெய்வ தண்டனை என்பதை உணர்வோமாக: தெய்வ தண்டனை இரண்டு வகை. 1 மனிதனுக்கு மனிதன் மூலம் கொடுப்பது. 2 மனிதனுக்கு இயற்கை மூலம் கொடுப்பது ( அனர்த்தம், அழிவுகள் ). ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு. எல்லை தாண்டினால் வாழ முடியாது. அதனால் இக்கொரோனா வைரஸ் எப்படி வந்ததோ அப்படி போகப்போகின்றது. எனவே தெய்வ தண்டனைக் காலமும் முடிவடையப் போகின்றது என்றே கூற வேண்டும். அதுவரை நீங்கள் எல்லோரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து பாதுகாப்பாக இருப்பது உங்கள் கடமையாகும்.

அதாவது அழிவைத்தரக்கூடிய பொருட்கள் யாவற்றையும் **அடியேன் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் வேளையில்** என்ன ஆச்சரியம்! அருகில் திடிரென ஓர் சிவலிங்கம் உருவாகி பின் சிவபெருமானாக மாறுகின்றார். அப்போது அடியேன் அழிவைத்தரக்கூடிய உணவுப் பண்டங்கள் யாவற்றையும் அவரின் வாயில் கொடுக்கக் கொடுக்க விழுங்கி விழுங்கி உண்ணுகின்றார் இத்தரிசனத்தை ஈசுர விநாயகர் காட்டியருளி கொரோனா வைரஸ் நோயின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். இதிலிருந்து கொரோனா வைரஸ் படிப்படியாக அற்றுப் போகப் போகின்றது என்பது உண்மை. இச் செய்தியை உங்கள் எல்லோருக்கும் அறியத் தருவது எனது கடமையாகும்.

அன்று தேவர்களும் - அசுரர்களும் திருப்பாற் கடலை கடையும் போது தோன்றிய நஞ்சை சிவபெருமான் தானே உண்டு உலக ஜீவராசிகளைக் காப்பாற்றினார் என்பது சமய வரலாறு. அதனை மீண்டும் சிந்திப்போமாக.

எனவே இக் கொடிய கொரோனா வைரஸ் விரைவாக அற்றுப்போக இறையருள் வேண்டி வரும் **ஆவணி சதுர்த்தி (22.08.2020) ஈசுர விநாயகரின் பாற்காவடி தினத்தில் பாலாபிஷேகம் செய்து அவரின் அருளைப் பெறுவோமாக.**

பறாளாய், சுழிபுரம்.

**சோழியூரான் - பிறைச்சூடிக் குரு**
ஆன்மீகவாதி
( ஆலய பரிபாலகரும் சந்ததி பூசகரும் )

(3621)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.